


# தமிழர் இனிய வாழ்வு

மகளிர், திருமணம்,
அணிகலன், சமூகம், நாகரிகம்,
சமயம், மருத்துவம் முதலியன

# தமிழர் இனிய வாழ்வு

வளமார் தமிழரின் வாழ்வைப்பற்றிய
சிறந்த கட்டுரைகளின் தொகுப்பு

*மகளிர் ❖ திருமணம் ❖ அணிகலன் ❖ சமூகம்*
*நாகரிகம் ❖ சமயம் ❖ மருத்துவம் முதலியன*

தொகுத்தவர்
முல்லை பிஎல். முத்தையா

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை-40
போன்: 26163596, 9840358301

# நூல் பற்றிய விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **தமிழர் இனிய வாழ்வு** |
| தொகுத்தவர் | : | முல்லை பிஎல். முத்தையா |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2006 |
| தாள் | : | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18.5 செ.மீ. X 12.5 செ.மீ. |
| பக்கங்கள் | : | 96 |
| வெளியிடுவோர் | : | **முல்லை பதிப்பகம்**<br>323/10, கதிரவன் காலனி<br>அண்ணா நகர் மேற்கு,<br>சென்னை – 40. |
| நூல் கட்டு | : | தாள் அட்டை |
| பொருள் | : | தமிழர் வாழ்வைப்பற்றிய கட்டுரைகள் |
| அச்சிட்டோர் | : | **சூர்யா பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ்**<br>**ஆயில்மாங்கர் தெரு, சென்னை–14** |

**விலை : ரூ.30.00**

# பதிப்புரை

உலகம் தோன்றிய நாளிலிருந்து மனித சமுதாயம் நாளுக்கு நாள் ஒவ்வொரு துறையிலும் முன்னேறிக்கொண்டு வருகிறது. இதை நாம் அந்தந்த நாட்டுச் சரித்திரத்தின் வாயிலாக அறிகிறோம்.

மனித சமுதாயம் தோன்றிப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகியும் முறையாக வாழத் தெரியாத மக்கள் கூட்டம் பல இக்காலத்திலும்கூட இருப்பதைக் காண்கிறோம்.

ஒவ்வொரு கூட்டத்தினரும் அவரவர் தாய் மொழியில் தம்முடைய வாழ்க்கைச் சிறப்புகளை அவ்வப் பொழுது கூறி வந்திருக்கின்றனர். அவற்றில் தலையாயது நம் தமிழர் சிறப்பு.

அத்தகைய சிறப்பு மிகுந்த வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் இதிலுள்ள கட்டுரைகள் சான்றுகளுடன் தெளிவாக உரைக்கின்றன.

கட்டுரையாசிரியர்கள் அனைவரும் தமிழறிஞர்கள். அவர்களைப் பற்றி இலக்கிய உலகம் நன்கு அறியும். இதிலுள்ள எட்டுக் கட்டுரைகளும் மதுரை தமிழ்ச் சங்கப் பொன்விழா மலரில் வெளிவந்தவை. அவற்றைத் தொகுத்து வெளியிட்டுக் கொள்ள அன்போடு அனுமதித்த கட்டுரையாசிரியர்களுக்கு இதய பூர்வமான நன்றி.

*சென்னை*

*1–6–1957* *முல்லை முத்தையா*

## உள்ளுறை

1. தமிழக மகளிர் --- 5
—அ. காமாட்சி குமாரசாமி

2. தமிழர் திருமண முறைகள் --- 18
—சரவண ஆறுமுக முதலியார்

3. தமிழர் சமூக வாழ்க்கை --- 33
—அர.சு. நாராயணசாமி நாயுடு

4. தமிழர் ஆடை அணிகள் --- 42
—ஆர். இராஜாமணி

5. தமிழர் நாகரிகம் --- 51
—து. கண்ணம்மாள்

6. பழந்தமிழர் சமயம் --- 60
—ஔவை சு. துரைசாமிப் பிள்ளை

7. தமிழர் மருத்துவக் கலை --- 79
—எஸ். எஸ். ஆனந்தம்

# 1. தமிழக மகளிர்

*அ. காமாட்சி குமாரசாமி, எம்.ஏ.,*
*தமிழ்ப் பேராசிரியர், சேலம் நகரசபைக் கல்லூரி*

**"மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**
**முனைக்கு வரம்பாகிய வெவ்வேல் நெடுந்தகை"**

என்பதற்கிணங்க, வீட்டின் விளக்கைப்போல் விளங்குபவர் மகளிர். போர் முனையேயன்றி நாட்டு வாழ்க்கைக்கே உரியவராய் விளங்குவோர் ஆடவர். வீடுதோறும் செம்மை விளங்கின், வீடு தானாகவே செம்மையுறும் என்பது உலகங்கண்ட உண்மை. எனவே வீட்டின் விளக்கைப் போல் விளங்கிய மகளிரின் அருமை பெருமைகளை ஆராய்வோம்.

தலைப்பிற் காணும் தமிழகம் காலங் கடந்த சொல்லாய்த் திகழினும் பிற்கால தமிழகப் பண்பாட்டிற்கும் தாயகமாய் விளங்கியது சங்க காலப் பண்பாடு. எனவே, அக்காலத்து மகளிரின் தன்மைகளை ஆராய்வதே தகுதியுடையதாகும். பண்டைத் தமிழ் மகளிரை நினைத்த மாத்திரத்தே பெரும்படை போன்ற மகளிர் தொகுதியே மனக்கண்முன் வந்து நிற்கின்றது. அக்கூடத்திற்தோன்றி முன்னிற்பொருள் ஔவை போன்ற பெண்பாற் புலவர் பலர்; கோப்பெருந்தேவி, பூதப்பாண்டியன் மனைவி போன்ற அரசியர் சிலர்; கண்ணகி, மணிமேகலை போன்ற காவியத் தலைவியரும் உளர். இவர்தம் பண்புகளை யெல்லாம் எடுத்தியம்புதல் இச்சிறு கட்டுரையில் இயலாது.

எனவே, இங்கொன்றும் அங்கொன்றுமாக வீட்டு வாழ்க்கையிலும், நாட்டு வாழ்க்கையிலும் விளங்கிய தமிழக மகளிரின் தன்மைகளைக் காண்போம்.

## வீட்டு வாழ்க்கை

மனையுறை மகளிர், உயிரென விளங்கிய தம் கணவரைப் பேணியும், பெண்ணின் பெருமையாய தம் திண்ணிய கற்பினைக் காத்தும், மயக்குறு மக்களை மாண்புற வளர்த்தும், வருந்திவரும் விருந்தினரை யோம்பியும், இடும்பைபெனக் கருதாது குடும்பச் சுற்றத்தைத் தழுவியும், கடவுளை வணங்கியும், கவின் கலை வளர்த்தும் துன்பந்துடைத்து இன்பம் பெருக்கினர்.

கணவனைப் பேணல்: கணவன் மனைவி என்ற இருவரின் தொடர்பைப் பல்வகை உவமைகளாற் கூறுவர் புலவர்.

**"உடம்பொடு உயிரிடை யென்னமற் றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு"** *- குறள். 1122*

என்றுரைப்பர் வள்ளுவர். இதையே—கணவனின் இன்றியமையாமையை—மற்றோர் உவமையால் நற்றிணை குறிக்கும்,

**"நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நந்நயந் தருளி"**

என்று தலைவியின் கூற்றில் திகழும் கருத்து, கணவனையிழந்த மனைவியின் வாழ்க்கை வறண்டு விடுவதையும் விளக்குகிறது.

**"கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று**
**இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி"**

என்ற சிலப்பதிகார அடிகளால், செல்வங் கொழிக்கும் அரசியின் வாழ்வும், கணவனிறக்க வறண்டு விடுவதை அறியலாம்.

அதேபோல் அறிஞர் தடுத்தும் உடன் கட்டையேறத் துணிந்த பூதப்பாண்டியன் மனைவியின் செயலும் இதனை வலியுறுத்தும். அலுத்து வந்த ஆருயிர்க் கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது மனைவியின் முதற் கடமையாகும்.

''நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டு''

''குய்குரல் மலிந்த கொழுந்துவை யடிசில்''

''ஓங்குசினை மாவின் தீங்கனி நறும்புளி''

''மோட்டிரு வரா அல் கோட்டுமீன் கொழுங்குறை''

போன்ற அடிகள் அவர்களது அட்டில் தொழில் வன்மையைக் காட்டும். தாம் சமைத்ததை, ''இனிது! இனிது!'' எனக் கணவர் சுவைத்துண்பதைக் கண்டு அம்மகளிர் மட்டிலா மகிழ்ச்சியடைவர் என்பதை,

''தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் று ஒண்ணுதல் முகனே'' *- குறு. 167*

என்ற குறுந்தொகையடிகள் எடுத்துக் காட்டும் இத்தகைய உண்மையன்பினாலே, வன்மைமிக்க ஆடவரையும் மென்மை மிக்க மகளிர் பிணித்து விட்டனர்.

''மென்மை மகளிர்க்கு வணங்கி வன்மையின்
ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை'' *- புறம். 68*

என்று சோழன் நலங்கிள்ளியைப்பற்றிப் புறநானூற்றில் கோவூர் கிழார் கூறுவர்.

''ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு'' *- குறள். 1088*

என்றுரைக்கும் திருக்குறளும். இவ்வாறு வீட்டு வாழ்க்கையில் அன்பின் கயிற்றால் மகளிர் பிணித்து விடுவதை வேற்றாரும் மாற்றாரும் காணுங்கால் அடிமைப்படுத்துவது போன்றே தோன்றும் போலும்! இக்கருத்தைக் குறுந்தொகையிலே மனைவியின் மாற்றாளான பரத்தையின் கூற்றில் வைத்துக் கூறி மகிழ்வர் ஓர் ஆண்பாற் புலவர். (கணவன் தன் மனைவியிடத்து)

'கையும் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும்...." - குறு. 8

எனக் குறிக்கும் அவ்வடிகள்! குறிப்பாக வீட்டு வாழ்க்கையில் எவ்வாறாயினும் சிறப்பாக நாட்டு வாழ்க்கையாம் வெளி வாழ்வில் மனையுறை மகளிரது ஏவலுக்குட்பட்டு வினையாண்மையை ஆடவர் இழத்தல் கூடாது என்று எச்சரிக்கை விடுப்பர். 'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தில் வள்ளுவனாரும். அதனாலன்றோ அவ்வதிகாரமும் இல்லறவியலன்றி பொருட்பாலில் வைக்கப்பெற்றது! இவ்வறவுரையை ஆடவரேயன்றி மகளிரும் நன்குணர்ந்திருந்தனர். இதனைத் தலைவி மறந்தாலும் துணையாய தோழி நினைவுறுத்துவாள்.

"வினையே ஆடவர்க்குயிரே
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென
நமக்குரைத் தோருந்தாமே" - குறு. 135

என்னும் அறவுரை ஒரு பெண்ணின் கூற்றுத்தானே!

மக்கட் பேணல்: நம் நாட்டில் இன்று போல் என்றுமே செல்வப் பெருமையும் இல்லா வறுமையும் ஒருங்கேயிருந்தன.

மாடமாளிகைக் கூடகோபுரங்களிடையே கூரை குறைந்த குடிசைகளும் கிடந்தன வென்று சங்கப் பாடல்களால் அறியலாம். விதியின் சதியால் பொருட் செல்வம் குறைந்தவிடத்தே மக்கட் செல்வம் நிறைந்து தோன்றும். காதல் வாழ்க்கையைக் கவின் பெறத் தொடங்கிய கண்ணகிக்கு மகப்பேறு குறிக்கப்படவில்லை. மாதவிக்கும் ஒரு தனிமகளேயாவாள் மணிமேகலையும். ஆனால், வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் மனைவியோ "மருங்கிற் பல்குறு மாக்களை" யுடையவளாகக் காட்டப் பெறுகின்றாள். அம்மடந்தை, உணவின்மை காரணமாகத் தன் குழந்தைக்கு இயற்கையுணவாய பால் கொடுக்க இயலாது போகவே, செயற்கையுணவாய சோற்றினை நாடிச் சென்ற அக்குழந்தை உள்ளே வெற்றுக்கலனே யிருக்கக் கண்டு பசியால் அழ, அவ்வழுகையை நிறுத்த மறப்புலி கூறிப் பயப்படுத்திப் பார்த்தாள்; மதியங்காட்டி நயப்படுத்தவும் இயலாது, 'நின் தந்தை வந்தால் எங்ஙனம் முகத்தில் சினங்கொள்வாய் காட்டு!" எனக் கேட்டும் பார்த்தாள். குழந்தையின் பசித்துன்பங் கண்டு, கண்கலங்கி நிற்கும் காட்சி ஒருபுறம் (புறம் 160). இதற்கு முற்றிலும் மாறாக மற்றொரு காட்சியும் உண்டு. செல்வக் குடியானதால் பெற்ற தாய் ஒருபுறம் வீற்றிருக்க, வளர்ப்புத் தாயான செவிலித்தாய், தேன் கலந்த பாற்சோற்றினைப் பொற் கிண்ணத்தில் வைத்துக் கொண்டு சிறுகோலோச்சி அச்சுறுத்தியும், செல்வக் குழந்தையாதலின் பசியின்றி உண்ண மறுத்துக் காற்சிலம்பதிரத் தோட்டப் பந்தலின் முன்னும் பின்னுமாக ஓடி யாடும் காட்சி மற்றொரு புறம்.

**பிரசங் கலந்த வெண்கவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்**

**புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொற் சிலம்பொலிப்ப... பந்தரோடி** - *நற். 110*

என்னே இவ்விரு காட்சிகளின் இருவேறு தன்மைகள்! முன்னையது குழந்தையின் பசியைப் போக்கும் முயற்சி. பின்னையது குழந்தையின் பசியையுண்டாக்கும் முயற்சி. ஆயினும், வாழ்விலும் தாழ்விலும், தமிழகத் தாய்மார். தம்மக்கள் சான்றோர் எனக் கேட்டபோதுதான் ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்தனர்; தாய்மையின் தகைமைக்கும் முரணாகப் பிறப்பொத்த தம்மக்களுள் அறிவுடையோரையே மிகவும் போற்றினரென்பதை.

**"பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்"** - *புறம். 183*

என்ற புறநானூற்றடிகள் விளக்கும். அதுமட்டுமா? இதற்கு முற்றிலும் மாறாகத் தன் மகன் சான்றோர் பழிக்கும் தீயோன் என்றால் அதைக் கேட்டு வாழ்வதை விட–அவனைப் பெற்ற வயிறு பற்றியெறிய அவ்வயிற்றுடன் வாழ்வதைக் காட்டிலும் – அவ்வயிற்றையே கிழித்துப் பழிவாங்கிப் பின்னர் இறப்பேன் என முழங்கினள் ஒரு தாய் என்றால் தமிழகத் தாய்மாரின் தாய்மைக் கடமையுணர்ச்சிதான் என்னே!

**"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே**
**நோலா அதனகத்து உன்னீன்ற னனே!**

* * *

**எம்மில் செய்யா அரும்பழி செய்த**
**கல்லாக் காளை நின்னீன்ற னனே!"** - *தகடூர் யாத்திரை*

கல்லாக் காளை யெனுந் தொடர் அக்காலத்திற்கேற்ப வெற்றி வீரங்கல்லாத காளையெனப் பொருள் பெறினும் இக்காலத்திற் கேற்பப் பல வாய்ப்புக்களைப் பெற்றுங் கல்வி பயிலாக் காளை யென்றும் – கல்வியில்லையென்றாலும் அறிவு ஒழுக்கம் கல்லாக் காளையென்றும் பொருள் படுமன்றோ! இன்றும் தாயுள்ளத்தில் இவ்வுணர்ச்சி யெழுமேல் எப்படித் திருந்திவிடும் இளைஞருலகம்!

## விருந்தோம்பல்

கண்ணைக் கவரும் வண்ணப் பலகையாலும், மூக்கையீர்த்து நாக்கூறச் செய்யும் நறுமணத்தாலும், காதைத் துளைக்கும் கானப் பாட்டாலும் ஊர்க்குள் நுழைவோரை வாவென்றழைக்கும் உண்டுறை உணவு விடுதிகள் இல்லாக் காலத்தே, வாணிபம் பற்றியோ வேறு வினைபற்றியோ வீடுதேடி வரும் விருந்தினர்க்கு (அக்காரணம்பற்றியே அக்காலத்தில் 'விருந்து' என்ற சொல் "புதுமை' எனப் பொருள் பட்டது) வயிறார உணவளித்து, உடலார உறைவிடங் கொடுத்து, உள்ளங்குளிர, புன்முறுவல் பூத்த இன்முகங் காட்டி, இனியவை கூறி விருந்தோம்பல், வீடுதோறும் இல்லறத்தாரின் இன்றியமையாக் கடமையாய் இலக்கிற்று. வறுமையில் வாடியோருங்கூடக் குப்பைக் கீரை கொய்து உப்பில்லாமல் அட்டேனும் விருந்தோம்பினர் எனப் பழம் பாடல்கள் கூறும். மாதரியின் விருந்தோம்பல் மாட்சியைச் சிலப்பதிகாரத்திற் காணலாம். வீடுதோறும் கீரையும், காய்கறிச் செடி கொடிகளும் இருந்தன வென்பதை,

> "...சிற்றி லாங்கண்
> பீரை நறிய கரையிவர் மருங்கின்" — *புறம். 116*

என்னும் அடிகளால் அறியலாம்.

'விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை' என்று கண்ணகி இழந்த பலவின்பங்களைக் குறியாது இதையே குறிப்பாளாயின் இல்வாழ்வாளின் இனிமையான கடமைகளுள்ளே விருந்தோம்பல் எத்துணைச் சிறப்புற்றது என்பதையறியலாம். விருந்தோம்பலால் விருந்தினர்க் கேயன்றி வீட்டோராகிய தலைவன் தலைவியர்க்கும் தனிப்பட்டதோர் அரும்பயனுண்டு. இது தம்முளேதோன்றும் ஊடல் நீங்கிக் கூடுவதற்குத் தக்க வாய்ப்பளிக்கின்ற தன்றோ! ஆகையால்தான் ஒல்காப்புகழ்த் தொல்காப்பியனாரும் இதனை ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாகக் கண்டு வைத்தார். என்னே விருந்தோம்பலின் பெருந்தன்மை.

**கலையறிவு:** இல்லறக் கடமைகளோடு மகளிர், கலை பல கற்றுமிருந்தனர்; கலையுணர்ச்சி பொருந்தத் தம்மை ஒப்பனை செய்து கொள்வர்; தம் சிறுவர் சிறுமியர்க்குக் கற்பனை நிறைந்த ஒப்பனை செய்து மகிழ்வர்; ஓவியம் தீட்டல், காவியம் புனைதல், ஆடல் பாடல் ஆகிய கலைத் துறைகளிலும் சிறந்து விளங்கினர் எனச் சங்கப்பாடல்கள் சான்றும் பகரும். மாதவியின் ஆடல் பாடல் திறன், கலைத்திறனுக்கோர் மலைச் சிகரம். தினைப்புனங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயக்கி யுறங்கச் செய்தாள் என்று அகநானூற்றுப் பாட்டொன்று கூறும். இவ்வருங்கலைகளேயன்றி இற்றைக் காலத்தில் "குடிசைக் கைத் தொழில்கள்" எனப் பெரிதும் பேசப்படும் நூல் நூற்பு, ஓலை வேலை முதலியன நடைபெற்றன என்பதைப் "பருத்திப் பெண்டிர்", "இரும்பனங் குடை" முதலிய சொற்றொடர்கள் விளக்கும். வீட்டுப் பொருள்கள் தோட்டப் பொருள்களான பனை தென்னை முதலியவற்றின் இளங்காய்கள் முதலியவற்றால்

சிறுதேர் முதலியன சிறார்க்குச் செய்து கொடுத்தனர். மாதரியின் விருந்தினராய்ச் சென்றவிடத்து, கண்ணகி, தன் கணவன் அமர்ந்துண்ண, ஆயர்மகளிர் அருந்திறனோடு பனங்குருத்தோலையால் செய்த அழகிய பாயினை இட்டாள் எனப் பின்வரும் சிலப்பதிகார அடிகள் சித்தரிக்கும்.

**"தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்**
**கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த**
**செய்வினைத் தவிசு..."**

இயற்கையோடியைந்த இனிய வாழ்வு: பண்டைக் காலத்துத் தமிழக மகளிர் இயற்கையோடியைந்த இனிய வாழ்வு நடத்தினர். சிறுமியர் சிறுவரோடு ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் நீராடியும் நிழலிலிருந்தும் ஆடிப்பாடி மகிழ்வர். சிறுமியர் கரையிலிருந்து ஆரவாரம் செய்து பாராட்டிப் புகழுமாறு சிறுவர் குளக்கரையிலுள்ள உயர்ந்த மரத்தின் உச்சியேறி, நீரில் வீழ்ந்து குளத்தின் அடிவரை பாய்ந்து அடிமண் கொண்டு கரை சேர்ந்து வெற்றிகொண்டாடி மகிழ்வர் எனத் தொடித்தலை விழுந்தண்டினார் (புறம் 243) புறநானூற்றுப் பாட்டொன்றில் எடுத்துக் காட்டுவர். இளம் பருவத்தேயே ஆடவர் வெற்றிகாண ஊக்கமூட்டியவர்கள் மகளிர் என்பது இதனால் விளங்குகின்றதன்றோ! இன்னும், ஆற்றங்கரை மணலில் பாவை விளையாட்டு, கடற்கரையில் நண்டுகளைப் பிடித்தாட்டும் அலவன் ஆட்டு, மணல் வீடு கட்டல், சிப்பி முதலியவற்றோடு விளையாடல் ஆகியவற்றில் மகளிர் ஈடுபடுவர். பருவ மகளிரும் நல்ல காற்றோட்டமுள்ள பரண்மீதிருந்து பயிர் காத்தனர் என்றும், முழுமதி நன்னாட்களிலும், மாலை நேரத்திலும் ஆடவரும் மகளிருமாகக் கூடி வட்டமாய் நின்றும் கைகோத்தும் குரவைக்

கூத்தாடுவர் என்றும் அறிகின்றோம். செல்வப் பெண்டிரும் மாலை நேரத்திலும், நிலவுக் காலத்தும், காற்றினையும், முழுநிலவினையும் துய்க்க நிலா முற்றங்களிலிருந்து மகிழ்வர்.

இறை வழிபாடு: இவ்வாறு இயற்கையோடு வாழ்ந்த மகளிர் இயற்கையின் உருவாய இறைவனையும் பலவகையால் தொழுதனர்; சிவன், திருமால், குமரவேள், புத்தர் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர். வீட்டிலும் மகளிர் மாலையில் மல்லிகை மலர்ந்ததும் பொழுதறிந்து விளக்கேற்றி, இருள் போக்கி ஒளிதரும் விளக்கினையே நெல்லும் மலருந்தூவி வழிபட்டனரென நெடுநல்வாடை கூறும்.

நாட்டு வாழ்க்கை: இவ்வாறு வாழ்க்கையை விளக்கும் மகளிருட் சிலர் நாட்டின் நலத்திலும் நாட்டங்கொண்டு வெளி வாழ்க்கையிலும் வெற்றி கண்டனர்.

அறிவும் ஆற்றலும்: நாடுவிட்டு நாடு சென்று நயம்படத் தூதுரைத்தனள் ஔவை மூதாட்டி. வழக்கறிஞர் துணை நாடாது, மன்னனின் மாபெரும் மன்றத்திலும் தானாகவே தன் வழக்கைத் திறம்படக் கூறிய கண்ணகியின் சொல்வன்மை போற்றற்குரியது. கரிகாற்சோழனும் பெருஞ் சேரலாதனும் வெண்ணிப் போரிற் பொருதபோது வளவன் எய்த வாளி, சேரனது மார்பு வழிச் சென்று, புறத்திலும் புண் செய்துவிட அம்முதுகுப் புண், இழுக்குக்குரிய புறப்புண்ணன்றி விழுப்புண்ணேயெனினும் புறப்புண்ணாகவே கொண்டு நாணி, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான் சேரன். அதே சமயத்தில் பலரும் போற்றிப் புகழ வளவன் தன் வெற்றியைக் கொண்டாடினான். வெற்றி, பகைவனின் பண்பையும் மறக்கச் செய்து வெறியாக மாறுவது உலகத்தியற்கை. அம்மாபெரும் வெற்றி முழக்கக் கூட்டத்திலே

பகைவனைப் பாராட்டும் பண்பு ஒருபெண்பாற் புலவரிடத்துக் காணப்பட்டது. வெண்ணிக்குயத்தியார் எண்ணித் துணிந்து எடுத்துரைத்தார்.

"வென்றோய்! நின்னிலும் நல்ல னன்றே"

* * *

மிகப்புகழு லக மெய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!" - *புறம். 66*

அவ்வம்மையினது அறிவும், ஆற்றலும், அஞ்சாமையும், நடுவு நிலைமையுந்தான் என்னே! இத்தகைய கல்வித் திறனேயன்றிப் பொது அறிவும் இயற்கையிலே பெற்று விளங்கினர் தமிழக மகளிர். பொற் கிண்ணத்துத் தேன் கலந்த பாற்சோற்றை உண்ண மறுத்துச் செவிலித்தாய்க்கு ஓட்டங்காட்டிய மேற்குறிக்கப் பெற்ற செல்வப் பெண்ணுங்கூடத் திருமணத்திற்குப் பிறகு எக்காரணத்தாலோ கணவனது பொருள் வளம் சுருங்கிவிடத் தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ் சோற்றுணவையுங் கொள்ள விரும்பாது தற்கொண்டான் வளத்திற் கேற்ப நாளில் ஒரு வேளை உணவே உண்ணும் நிலையைக் கண்ட செவிலித்தாய் அவளது அறிவை வியந்து பாடியதாகக் காட்டும் அந் நற்றிணைப் பாட்டு நயத்தற்குரியது:

"..........................பந்தரோடி
ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவறனுற் றென்று
கொடுத்த தந்தை கொழுஞ் சோறுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமதி கையளே - *நற். 110*

என்பது அப்பகுதி. அவள் அறிவும் ஒழுக்கமும் எங்கே கற்றாள்? பள்ளியிலும் கல்லூரியிலுமல்ல—வாழ்க்கைப் பள்ளியில்—தமிழகப் பண்பாட்டுப் பள்ளியில்—குடும்பக் கல்லூரியில் கற்ற அறிவு—பெற்ற ஒழுக்கம். இத்தகைய பொது அறிவுடன் வாழ்க்கையை நடத்தினால்தான் ஆடவர்க்குக் கவலையும் இராது – அக்கவலையின் அறிகுறியாகிய நரையும் வராது. ஆடவரின் கவலைக்கு முதல் காரணம் அறிவற்ற மனைவியே என்று பொருள்படப் பாடினர் பிசிராந்தையார்.

**'யாண்டுபல வாக நரையில வாகுதல்**

**யாங்கா கியரென வினவுதி ராயின்**

**மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர் அறிவால்**

***–புறம். 191***

என்பது அப்பாட்டு.

**துறவும் தொண்டும்:** தன்னலங் கருதாது மக்கள் நலங் கருதி மக்கள் தொண்டாற்றிய மணிமேகலை துறவுக்கும் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. தனி வாழ்க்கை தானாகவே அமைந்துவிட்ட கன்னிப் பெண்களும் தயங்காது தொண்டாற்ற முன்வரலாம் என்பதைக் காட்டும் அவளது அரிய வாழ்வு "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என உணவுக் கொடை புரிந்தும், சிறைக் கோட்டமெலாம் அறக் கோட்டமாய் மாற அருங்கனவு கண்டும் பெருந் தொண்டாற்றிய மங்கை மணிமேகலை.

**வீரம்:** ஆடவரைப் போன்றே முது குடிமகளிர்க்கும், மறமாகிய வீரவுணர்ச்சியுண்டு என்பதை,

**"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்**

**மடவரல் மகளிர்க்கு மறம்மிகுத் தன்று"**

என்ற மூதில் முல்லை இலக்கணச் செய்யுள் குறிக்கும். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாக எண்ணிறந்த பாடல்கள் புறநானூற்றில் உண்டு. கணவனும் தமையனும் களத்திலிறக்க, போர்க்கோலம் புனைவித்துப் போருக்கனுப்பிய தாயின் வீரம் (புறம்.279), நரை மூதாட்டி தன் முதுமைப் பருவத்து அருமையாய்ப் பெற்ற ஒரு தனி மகனும் போரிலிறக்க வருந்தாது ஈன்ற ஞான்றினும் பெரிதும் மகிழ்ந்த தாயின் வீரம் (புறம்.277) இப்பாடல்களிற் பொலிந்து தோன்றும்.

இவ்வாறு வீட்டிலும் நாட்டிலும் புகழுடன் பொலியும் மகளிர், தமக்கு மனைவியராய் வாய்ப்பதையே பெரும் பேறாகக் கருதினர் ஆடவர் என்னும் கருத்து, குறுந்தொகைப் பாட்டொன்றிற் சிறந்து விளங்கும். ஒரு தலைவன் தன்னூர்ப் பெருந்தெருவில் செல்லும்போதெல்லாம் பலரும் அவனைச் சுட்டிக் காட்டி, "நம்மூர் நல்லாள் இன்னாளில் கணவன் இதோ செல்கின்றான்!" எனக் கூறுவது, சற்று நாணத்தைத் தருவதென்றாலும் அதனையே பெரும் பேறாகக் கருதினனாம்!

**"........................அரிவையைப்**
**பெறுக தில்ம்ம யானே பெற்றாங்கு**
**அறிக தில்லம் மஇவ்வூரே மறுகில்**
**நல்லோள் கணவன் இவனெனப்**
**பல்லோர் கூறயா நாணுகஞ்சிறிதே"** *- குறு. 14*

என்ற அளவுக்குத் தமிழக மகளிர் தம் கணவன்மாருக்குப் பெருமை தேடித் தந்தனர்.

வாழ்ந்தோங்குக தமிழக மகளிரின் தனிப் பெரும் பண்பாடு.

# 2. தமிழர் திருமண முறைகள்

*பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார்*

பிற நாடுகளெல்லாம் அறியாமை இருளில் கிடந்து உழன்று கொண்டிருந்த பொழுது இருநில உலகின் பெருநிலப் பரப்பில் கல் தோன்றி மண் தோன்றாத, வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகமிக முற்பட்ட பழங்காலந் தொட்டே கல்வி, கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றில் தமிழ் மக்கள் மிக மேம்பாடெய்தியிருந்தனர் என்பது வரலாற்றறிஞர் கண்டறிந்த உண்மையாகும். அகம், புறம் என இரு கூறாக இயங்கும் தம் வாழ்க்கை முறைகளில் மிக உயர்ந்த கொள்கைகளையும், குறிக்கோள்களையும் கொண்டு விளங்கினர் தமிழ் மக்கள். அவ்விரு கூறுகளுள், முதன் முதல் வாழ்க்கைத் துணைவர்கள் ஒருவரை ஒருவர் களவிற்கண்டு ஒன்றுபட்ட களவியல், அதன் வழித்தாகிய கற்பியல், அதில் ஆற்றுப் படுத்தும் மணவியல், மணவாழ்க்கையின் நிலைக்களமாகிய இல்லறத்தின் நல்லறம் ஆகிய இன்னோரன்ன வாழ்க்கை முறைகளைச் சங்கத்துச் சான்றோரிலக்கியங்களிலும், அவற்றிற்கு முற்பட்டு ஒரே வழிக் காணலுறும் பாடல்களிலும்,

அவற்றின் வழிவந்த ஒல்காப் புலமைத் தொல்காப்பியனாரின் பொருளதிகாரப் பகுதிகளிலும் நாம் விளக்கமாக அறியலாம். திருமண முறைகள் இலை மறைகாய் போல் இவற்றுள் அமைந்திருக்குமாற்றைத் தொல்காப்பியர் காலமுதல், இடைக் காலம் (12-ஆம் நூற்றாண்டு) முடிய ஒருவாறு காண்போம்.

கணவனும் மனைவியுமாய் வாழத் தொடங்கும் நிலைக்குத் திருமணம் என்ற பெயர் வைத்தமை எண்ணி மகிழ்தற்குரியதாகும். திருவென்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள்பொதிந்த சொல்லாகும்; சுருங்கக் கூறின், "கண்டோரால் விரும்பப் பெறும் தன்மை விளங்குமிடமெல்லாம்" திருவும் பொலிகின்ற தென்று சொல்லலாம். மணமென்னுஞ் சொல் நறு நாற்றத்தைக் குறிக்கும். பெரும்பாலும் இயற்கையில் மணங்கமழ்வது மலர்களேயாகும். அம்மலரும், வைநுனையாய் - சிற்றரும்பாய், வீயாய் இருக்குங்கால் மணஞ்சிறப்பதில்லை; மலரும் நிலையில் - பெரும் போதாய் நிற்கும் போதுதான் மண மிகுந்து விளங்குகின்றது. காய்த்துக் கனிந்து விளங்க மணமிகும் போதுப் பருவமே சிறந்த தாகும். அங்ஙனமே மக்கள் வாழ்விலும் குழவியாய், இளைஞனாய், நரைமூதாளனாய் இருக்கும் நிலை பெருஞ்சிறப்புடையதன்று. மணந்து மகப்பெற்று நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லன புரியச் சிறந்து நிற்பது மணப் பருவமே யாகும். இப்பருவத்தில், மலரின்கண் மணம் வெளிப்படுவதுபோல் மணமக்களின் மனத்தகத்து அன்பு மலரும். இச்சிறப்புணர்ந்தே தமிழ் மக்கள், இந்நிகழ்ச்சி (மணவினை)யை மணமென மனமுவப்பக் கூறினர். மண மென்பது மணமக்களின் மனமொத்ததாகும். வாழ்வு முழுவதும் மணம் பெற்றுத்

திகழ்வதற்கு ஏதுவான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டமை ஏற்புடைத்தாகும்.

தமிழ் மக்கள் தம் வாழ்க்கையை, அகம்புறம் எனப் பகுத்துள்ளனர். இது 'தமிழின் துறைவாய் நுழைந்தனையோ' என்ற திருக்கோவையாரடிக்குப் பேராசிரியர், "தமிழின் துறைகளாவன ஈண்டு அகமும் புறமும்' என உரைத்தமையாலும் அறியலாம். அப் பண்பட்ட நிலையில், அப்பகுதிகளுக்குரிய இலக்கணத்தையும் வரையறுத்து வாழ்ந்து வந்த பெருமை தமிழ்மக்கட்கே உரிய தனிச் சிறப்பாகும். ஏனைய மொழியினர் அறம்பொருள் இன்பம் வீடெனப் பகுத்த வெல்லாம் இவ்விரண்டனுள் அடங்கி நிற்கின்றன. உலக நிகழ்ச்சிகளை யெல்லாம் உன்னிப் பார்க்கும்போது அவை காதலும் போருமாக – ஈரச் சுவையும் வீரச்சுவையுமாக – நிற்கக் காண்கின்றோம். இதனையே நம்மனோரின் அகம் – புறம் என்ற பாகுபாடு உணர்த்தி நிற்றல் ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகும். வீரத்திற்கும் அன்பே அடிப்படையாக அமைந்துள்ளது. எனவே, அகம் புறமென அமைந்து கிடக்கும் தமிழினத்தின் வாழ்வு அன்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமை அறிந்தின்புறத் தக்கதாகும்.

இனி, தமிழர்தம் வாழ்க்கைப் பிரிவிற்கு அகம் புறம் எனப் பெயரிட்டதன் காரணத்தைக் காண்போம். அன்பு நெறியில் முதிர்ந்த ஒரு தலைவனும் தலைவியும் கூடி இன்புற்று வாழும் வாழ்வெல்லாம் அகம் எனப்பட்டது. இதனை, "ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இஃவாறிருந்ததெனக் கூறப்படாதாய்,"

"உள்ளறிந்ததன்றிமற்றிவ் வூரறிந்ததில்லையே' என்றபடி யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொரு'ளாதலானும், முத்திப் பயனாய பேரின்பத்தையும் தன்னகத்தே குறிப்பாய்க் கொண்டுள்ளதாகலானும் தொல்லாணைத் துறைபோகிய நல்லாசிரியர் இதனை அகம் என்றனர். அன்றியும் இஃது,

**"சொற்பால் அமிழ்திவள் யான்சுவை**
**யென்னத் துணிந்திங்ஙனே**
**நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று**
**நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்.**

என்ற கோவையார்ப் பகுதியானும் இதற்கு, 'நல்வினைத் தெய்வம் களவின்கட் கூட்ட, அமுதமும் அதன்கட் சுரந்து நின்ற சுவையுமென்ன, என்னெஞ்சம் இவள்கண்ணே கரந்து ஒடுங்க, யானென்பதோர் தன்மை காணாதொழிய, இருவருள்ளமும் ஒருவேமா மாறுகரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட்பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது) யாவரான் அறியப்படுமென்று மகிழ்ந் துரைத்தான்" எனப் பேராசிரியர் உரைத்த உரைப் பகுதியானும் உணரப்படும். இவ்வகை ஒழுக்கம் ஒழிந்த ஏனைய வாழ்க்கையின் முடிந்த பேறாகிய வீடு பேறும், அதற்குக் கருவியாய அறஞ்செயலும், அதற்கான பொருளும் அவற்றிற் கிடையூறு நேருங்கால் ஆற்றும் போரும் பிறவுமெல்லாம் புறம் எனப்படுகின்றது.

அகத்தினைத் தொல்காப்பியம் களவு கற்பு எனப் பகுத்துரைக்கின்றது, அவற்றுள் களவு, "இன்பமும் அறனும்

பொருளு மென்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற், காமக் கூட்டமெனவும், அன்பினைந்திணைக் களவெனப்படுவது" எனவும், 'களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர், உளநிகழ் அன்பின் உயர்ச்சி மேன' எனவும் அன்பின் அடிப்படையாக அகத்துட் பிறப்பதொன்றாம். இவ்வன்பு ஒழுக்கத்தில் ஈடுபடும் தலைமக்கள் அதற்குயிர் நிலையாய அன்பால் ஒத்திருப்பர். அன்றியும்,

**"பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ**
**டுருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென"ப்**

பத்து வகை ஒப்புமைகளைக் கொண்டு விளங்கும் தலைமகனும் தலை மகளும் பிறர் கொடுப்பவும். அடுப்பவுமின்றி ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கலக்கும் முறையே தலையாயதெனப் புலனெறி வழக்கத்தில் பயிலும். "பிறர்க்குரித்தென்று இரு முதுகுரவரால் கொடை எரிந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது, இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த" தால் களவாயிற்றென்பர் நச்சினார்க்கினியர். மேலும், "ஒத்த அன்பினராய் இன்பத் துறையில் நின்று இல்லறம் புரிந்தாரைப் பின்னர் வீடு பேற்றின்பம் உறுமாறு வஞ்சித்துக் கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇனமையால் களவியல்" ஆயிற்றெனக் காரணங் காட்டுவர் இறையனார் அகப் பொருளுரையாசிரியர். அன்றியும். இருவர் உள்ளமும் தத்தமது ஒழித்து, மற்றவர் இடத்தை அவர் அறியாது கொள்ளை கொண்டு தங்குதலான் இவ்வொழுக்கம் களவெனும் பெயர் பெற்றது பொருத்தமாகின்றது. எனவே, தமிழ் நாட்டில் குலம் தொழில்

உயர்வு தாழ்வு முதலிய வேறு பாடுகளைக் கொள்ளாது, உள்ளத்தெழுந்த அன்பினால், எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் கலந்து, களவு நெறி நின்று பின் கற்பு நெறி நிற்பர் என்பது விளங்குகின்றது. இதனை, "யாயும்யாயும் யாரா கியரோ" எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுளால் அறியலாம்.

கற்பென்பது கணவனும் மனைவியுமாய் மணம் புணர்ந்த மக்கள் தாம் மேற்கொண்ட இல்லறத்தை நல்லறமாக நடாத்தும் ஒழுக்கமாகும், கற்பென்பது கல்லென்னும் பகுதியில் தோன்றிக் கற்பித்தவாறு நடத்தல், கற்றபடி நடத்தல் என்னும் பொருள் தந்து நிற்கின்றது. பட்டறிவும் தெளிவுங்கொண்ட இரு முதுகுரவரும் சான்றோரும், "வையத்து வாழ்வாங்கு வாழ்க', "பெற்றோன்வெட்கும் பிணையை ஆகுக", "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்வில"ளாய் வாழ்கவெனக் கற்பித்தவாறு வாழ்க்கையை நடத்தல் கற்பாகும். இதனையே, 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்ற தொடரும் விளக்குகின்றது. இக் கற்பொழுக்கம், 'கற்பெனப்படுவது கரணமொடு புணரக் கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக் கொடைக்குரி மரபினோரர் கொடுப்பக் கொள்வதுவே' எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது.

ஒருவனும் ஒருத்தியுமாய்க் களவில் ஒழுகிய தலைமக்கள் பலரறிய மணந்துகொண்டு ஒழுகும் ஒழுக்கம் கொள்ள வேண்டிய தென்ன? செம்புலப் பெயல்நீர் போல் அன்பிற் கூடி இன்பந்துய்த்து வாழ்வது இயல்பு, — அங்ஙனமே வாழ்ந்தும் வந்தார்கள். மனம் குரங்கெனப் படுதலின், கரிபொய்த்தலும், சூள்

பேணாது துறத்தலும் ஒரோ வழி நடத்தலும் கூடும். அந்நிலையில் ஊர் மக்களால் எட்டியும் சுட்டியும் இழிக்கப்படும். சிலரும் பலரும் கடைக்கண்ணோக்கி மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி மறுகில் அம்பல் தூற்றவுமாகும். எனவே பலருமறிய, கொடுத்தற்குரியோர் கொடுக்கக் கொள்ளற் குரியோர் கொள்ளும் நிலை ஏற்பட்டதென்க. அன்றியும் "பிரிவின்றியைந்த துவரா நட்பொடு, இருதலைப்புள்ளின் ஒருயிராய்' ஒழுகிய தலை மக்கள் தங்கள் நலனையே யன்றிச் சமூக நலனையும் நோக்கி வாழவேண்டிய இல்லறத்தை ஏற்குங்கால் அச் சமுதாயத்து மக்கள் அனைவரும் அறியும் வகையில், அவ்வாழ்வைத் தொடங்குதலும் ஏற்புடைத்தாகும். இருமுதுகுரவரும், சுற்றமும் நட்பும், உற்றோரும் மற்றோரும் வாயார உண்டு. மனமார வாழ்த்தித் தொடங்கும் நல்வாழ்வே சிறக்கும் என்பதாலும் களவு கடந்து கற்பொழுக வாழ்வும், அதன் தொடக்கமாய திருமணமும் வேண்டப்படுவதாயிற்று. களவு கற்பெனும் கைகோள் இரண்டனுள் களவின் வழி கற்பெனும் கைகோள் இரண்டனுள் களவின் வழி வந்த கற்பொழுக்கம் சிறப்புடையது. இதனை, உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும் செயிர் தீர்காட்சிக் கற்புச் சிறந்தன்று' என்ற தொல்காப்பிய நூற்பா நுவல்கின்றது.

கற்பாவது கற்பித்தபடி நடத்தலென்றாகவே, கற்றற் குரியன யாவை என நோக்குதல் வேண்டும். இதனைத் திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை நல"த்தில் னிதியம்புகின்றார். இல்லறத்தின் கடமையாக, இளங்கோவடிகளும், "அறவோர்க் களித்தலும், அந்தண ரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்" என எடுத்துக் காட்டுகின்றார். அத்தகு வாழ்வை, "விருந்து புறந்தரூஉம் பெருந்தண்வாழ்'

வெனப் போற்றுகின்றார். இல்லறக் கடமைகளை, "அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்துமென்று அழுங்கும், விருந்து கண்டபோது என்னுறுமோ என வெதும்பும்" என்னுமடிகளில் கற்புக்கரசியாய் சீதையின் வாயிலாய்க் கம்பநாடர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தமை காண்க.

கற்பு என்றவுடனேயே அது பெண்டிர்க்கே உரியதென நினைத்து விடுகின்றனர். அஃது ஆடவர்க்கும் ஒப்ப உரியதும், இன்றியமையாததும் என்பதை நம் அறநூல் உறுதியாக அறுதியிட்டுரைக்கின்றது. பிறர்மனை நோக்காத பேராண்மையையும், இல்லிகவா நல்லியல்பையும் வற்புறுத்துவதுடன், வரைவின் மகளிர், பெண் வழிச் சேறல் முதலியவைகளைத் தவிர்த்தலும் ஆடவர்க்குக் கற்பு வேண்டுமென்பதை வலியுறுத்தா நிற்கும். தொடக்கத்தில் தலைவன் தலைவியர் தாமே கடிமணம் புரிந்து வாழ்ந்து வந்தவராதல் வேண்டும். அத்தகு வாழ்வில், இணக்கம் நீங்கிப் பிணக்கமும், நல்லறம் நீங்கி அல்லறஞ் சேர்தலும் நிகழ ஏதுவாக, அன்பு மறந்து, அறக் கழிவு ஒரோவழி நேர்ந்திருக்கவும் கூடுமாதலால், ஆன்றோர்கள் களவில் ஒழுகிய மக்கட்குத் திருமணம் என்ற சடங்கு நிகழ்ச்சியை ஏற்படுத்திப் பலரும் அறிய இணைந்துவாழும் முறையையே ஏற்படுத்தினர். இக்கால நம்பிகளும் நங்கைமார்களும், பெற்றோர்களும், சிறப்பாகக் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியரும் இதைக் கருதவேண்டும். தனித்துப் பேசிப் பழக வாய்ப்புக்களுள்ள இவர்கள், 'கண்டதே காதல்' என்னும் போலிப் புறக் காதல் அல்லது விலங்குணர்ச்சியாகிய காம உணர்ச்சி வயப்பட்டுத் தடுமாறிக் கூடிப் பின் பிரிந்து சென்று

பாவப் படுகுழியில் வீழத்தக்க நிலையில் உள்ள இவர்கள் பலருமறியத் திருமணம் செய்து கொள்ளும் முறையைக் கருதிச் செய்துகொள்ள வேண்டும். அப்படித் தமிழர் அனைவரும், ஒரே முகமாக வேறுபாடு மாறுபாடு இன்றி, தோட்டி முதல் தொண்டைமான் வரையில், தமிழ் மரபு வழுவாமல் மேற்கொண்டு ஒழுகத்தக்க ஒரே ஒரு திருமண முறை வகுக்கப்பட்டு வழங்கி வரும் நாளே தமிழகத்தின் நன்னாளும் பொன்னாளும் ஆகும். களவு வாழ்வியலில் நாளடைவில் ஊழல்கள் புகுந்த காரணத்தினாலேயே கற்புத் திருமண முறை சான்றோரால் வகுக்கப்பட்டதைப் 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்னும் தொல்காப்பிய நூற்பாவால் நன்குணரலாம். இதனை அடுத்து வரும் நூற்பாக்களிற் பயிலும், 'மேலோர்' 'கீழோர்' போன்ற தொடர்கட்குச் சிலர் தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறுபட்ட பொருந்தாவுரை கூறி வந்துள்ளனர். அவருரைத்த மாறுபட்ட வேறுபட்ட உரையெல்லாம் நாவலர் நாட்டார், டாக்டர் பாரதியார், அறிஞர் மாணிக்க நாயக்கர், தமிழ் மலையாம் மறைமலையடிகளார் முதலிய பைந்தமிழ்ப் பாவலர்கள் பகர்ந்த உரையாகிய கதிரவன்முன் பனியெனச் சிதறுண்டன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே, சங்கத்துச் சான்றோர்களின் செய்யுட்களுக்கு முன்னரே, திருமண முறைகள் இருந்திருக்க வேண்டும். அதுபற்றியன்றே தொல்காப்பிய இலக்கண நூலிலும் பொருளிலக்கண வரையறை செய்யும்போது, மணமுறை பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. கடைச் சங்க காலத்தில் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு–அதன் இறுதிக் காலம்) திருமண முறை இருந்ததெனக் குறிப்பா யுணர்ந்த போதிலும், அது எவ்வாறு நிகழ்ந்தது எனத் தெளிவாக

யுணர்வதற்கேற்ற வெளிப்படை விவரங்கள் கிடைத்தில. எனினும் ஒரு சில பாடல்கள் குறிப்பாகப் புகலுவதைத் துணைகொண்டு அறிவனவற்றைக் காண்போம்.

அக்காலத்து, இக்காலம் போன்று திருமணத்தை நடத்தி வைப்பதற்கெனத் தனிப்பட்ட ஒரு நடத்துபவன் (புரோகிதன்) இருந்ததாகத் தெரியவில்லை. பெற்றோரும் உற்றோரும், உடனிருந்து நடத்தி மகிழ்வதாகவே காண்கின்றோம்.

**"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை**
**பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்**
**றண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி**
**மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்**
**கனையிருள் அகன்ற கவின்பெரு காலைக்**
**கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்**
**கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென**
**உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்**
**பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்**
**முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்**
**புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று**
**வாலிழை மகளிர் நால்வர் கூடிக்**
**கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**
**பெற்றோன் பெட்கும் பிணையை யாகென**
**நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**
**பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
**வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்**
**கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து**
**பேரிற் கிழத்தி ஆகெனத் தமர்தர"**

என்னும் 86–ஆம் நெடுந்தொகைப் பாடலில், திருமண முறைக் குறிப்புக்கள் சில உள. உழுந்து முதலியன இட்டுப் படைத்த உணவுத்திரள் நிறைந்திருக்க, நல்ல காவணம் அமைத்து, புதுமணல் பரப்பியிருக்கத் திருவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டுப் பூமாலைகள் பொலிவுறத் தொங்கவிடப்பட்டுள்ளன. தீக்கோள்கள் நீங்கி விளங்கும் நன்னாள். காரிருள் அகன்ற காலை நேரம். நன்னீர்க் குடங்களேந்திய முதிய பெண்டிர் கலகலவெனப் பேசிக்கொண்டு, அவற்றை முன்னும் பின்னுமாக முறையே கொண்டு வந்து தர, மகப்பேறெய்திய மங்கல மகளிர் நால்வர் அவற்றை வாங்கி, நெல்லும் மலரும் தூவி, மணமகளை நன்னீராட்டிப் பின்னர், கற்பினில் வழாது பொற்புடன் விளங்கி, பெற்றோர் விரும்பும் பெற்றியை யாகென வாழ்த்துகின்றனர். பின்னர்ப் பெற்றோர், "நீ பேரிற்கிழத்தியாகுக' என வாழ்த்தி மணமகன்பால் கொடுக்கின்றனர். இம்முறையே குறிப்பாக இப்பாவிற் பயிலுகின்றது. அன்றியும்,

"மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப் புணர்ந்தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் புனைந்து, கடவுட் பேணிப்
படுமென முழவொரு பருஉப்பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று

* * *

மழைப் பட்டன்ன மணல்மலி பந்தர்
இழையணி சிறப்பில் பெயர் வியர்ப்பாற்றி
தமக்கீந்த தலைநாள்" - *அகம். 136*

என்ற அகநானூற்று அடிகளாலும் இது ஒருவாறு வலியுறுகின்றது. இவற்றால் திருமணத்தின்போது மணமக்களை நன்னீராட்டி, நலம்பெற அணிவித்து மகிழ்வர் என்பதும், மணவினை மனை நன்றாக ஒப்பனை செய்யப்பட்டு நிற்கும் செய்தியும் தெளிவாகின்றன. மங்கல வாழ்த்தில், மணமனையில்,

**"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து**
**நீல விதானத்து நித்திலப் பூம்பந்தர்"**

விளங்குவதை, இளங்கோவும் எடுத்தியம்புவது காண்க.

மணமனையில் மல்கும் மங்கல நறுமணச் சூழலை,

**"சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்**
**................ இடித்த சுண்ணத்தர்.**
**விளங்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை**
**முளைக்குட நிரையினர்..............."**

என்ற சிலப்பதிகார அடிகள் விளக்குகின்றன. 'மணவில் கமழும் மாமலைச்சாரல்' என மலைபடுகடாமும் (151), மணமனை கமழும் கானம் என அகநானூறும் (107) உவகை முகத்தானும் எடுத்து ஓதுகின்றன. மண வினையிற் பங்கு கொள்ளும் பெண்டிரில் மங்கலப் பெண்டிரே சிறப்பாக வருவர் என்பதை முன்னர்க் கண்டோம். புறநானூற்றிலும், 'ஈகை அரிய இழை அணிமகளிர்' என வரும் பகுதியாலும் மணவினையில் மங்கலப் பெண்டிரே ஈடுபடற்குரியர் என்பது புலனாகின்றது. 'இழையணி' என்பதற்கு மங்கலப் பெண்டிற்குச் சிறந்த அணியாய "தாலி' என உரை வகுக்கின்றனர். ஈகை அரிய என்பதனைக் கொடுத்தற்கரிய எனக்கொண்டு, தாலியின் தனிப் பெருஞ் சிறப்பைக்

கூறியதாகவும் கொள்ளலாம். ஈகை என்பதனைப் பொன்னாக்கிப் பொன்னாலாகிய தாலி என்றும் புகலலாம். “ஈகை வான் கொடியன்னாள்' என்பதில் ஈகை பொன்னுப் பொருளில் பொருந்தியது காண்க. எப்பொழுது தாலி கட்டப்படும் என்ற விவரங்களுக்குச் சான்றுகள் காணப்படுவதில்லை. இது இன்னும் ஆராய்தற்குரியது.

இனி, திருமணம் மணமகள் இல்லத்திலேயே நிகழும். ஒரோவழி மணமகன் மனையிலும் நிகழுவதுண்டு. உடன் போக்கிற்குப் பின்னிகழும் திருமணம் தலைவன் இல்லில் நிகழும். அவ்வாறு நிகழினும் பின்னர்த் தலைவியின் பெற்றோர் மீண்டும் தமதில்லில் தமர் அறிய மணம் புணர்ப்பர் என்றும் அறியலாம்.

**“நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்**
**சொல்லின், எவனோ மற்றே வென்வேல்**
**மையற விளங்கிய கழலடிப்**
**பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே”** *- குறுந்தொகை. 399*

என்னும் செய்யுளில் இது குறிக்கப்படுகிறது என்பர் அறிஞர்.

எனவே, கடைச் சங்ககாலத்தில், புரோகிதர் புகுதலின்றியே, மணமக்கள் தம் பெற்றோரும் மற்றோரும், உற்றோரும் உறவினரும் புடைசூழ மணவினையை மகிழ்ந்தாற்றி வாழ்ந்தனர் என அறிகிறோம். ஆனால், காலப் போக்கில் தமிழகத்தில் பிற பண்பாடுகள் வந்து மலிந்து கலப்புற, மண முறையிலும் இடைப்பிறவரல்கள் வந்துற்றன. வரலாற்று முறையில் காய்தல் உவத்தல் களைந்து ஆராய்வார், காலத்திற்குக் காலம், படிப்படியாகத் திருமண முறை மாறுபாடுற்று வந்துள்ளதை நன்கு

அறிவர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த இளங்கோவடிகளின் விளங்கு காவியத்தில், தமிழ்த் திருமண முறையில் பெருமாற்றம் தலை காட்டத் தொடங்கியுள்ளது. இருநிதிபடைத்த பெருங்குடி வணிகர் மரபில், யானையின் மீது மகளிரை ஏற்றித் திருமண நிகழ்ச்சியை ஊருக்கு அறிவிக்கும் வழக்கம் வருகின்றது.

**'யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ**
**மாநகர்க் கீந்தார் மணம்"**

எனச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. மேலும் நடத்துவிப்போன் ஒருவன் மணவினையில் முதன் முதல் தலைகாட்டுகின்றான். எரிஓம்பி அதனை வலம் வரும் சடங்கு போன்றவையும் தோன்றியுள்ளன. இதனை,

**"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை"**

என்ற அடிகளால் அறியலாம். இனி, இடைக்காலத்து 9–10 நூற்றாண்டு முதல் 12–ஆம் நூற்றாண்டு இறுதிவரை, தமிழ் நாட்டில் பல தமிழ்க் குடிகளிலும் நிலவிவந்த தமிழ்த் திருமண முறைகளை அக்காலத்தெழுந்த காவியங்களாகிய சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம் ஆகிய காவியங்களிற் கவினுறக் காணலாம். இவை சங்ககால முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகப் போகின்றன. 'யாயும் யாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர், நீயும் யானும் எவ்வழி அறிதும்" என முன்பின்னறியாது, பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இல்லாது, களவியலில் மக்கள் நின்றதுபோக, பெற்றோரே முன்பின்னறியாத மணமக்களை ஒன்று கூட்டுவிக்கும் செய்திகளை

இவ்விடைக்காலக் காவியங்களிற் காணலாம். திலகவதியாரின் பெற்றோர்களும், கலிப்பகையாரின் பெற்றோர்களும் இருவரையும் ஒன்று விக்கக் குலம் பேசிக் குணம் பேசிப் பாாக்கவில்லையா? இவ்வாறு களவியலருகித் திருமணமெல்லாம் கற்பிலேயே தொடங்கி மாறுபாடற்ற இடைக்காலத்தில், 'தமிழ்நாட்டு மணமுறை களவியல் வழிக்கற்பியலாகும் என்பதே' என்பதை வற்புறுத்தக் கம்பர் முதனூலின்றும் முரணி, இராமனும் சீதாபிராட்டியும் ஒருவரை ஒருவர் திருமணத்துக்கு முன்னரே கண்டு காதலுள்ளங்களாற் கலந்தனர்;

**"உண்ணவும் நிலைபெறா துணர்வு மொன்றிட**
**அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்"**

**"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து**
**ஒருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்**
**வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்**
**இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்"**

என்றெல்லாம் புனைந்து கூறியிருப்பது தமிழ்நாட்டு மரபுக்கு ஏற்றதேயாகும். எனினும், திருமண முறை நிகழ்ச்சிகளில் புதிய சடங்குகளாகிய தாரை வார்த்தல், எரி ஓம்பல், எரிவலம் வரல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் முதலியன கம்பரில் காணப்படுகின்றன. இடைக்காலத்து நிலவிய மணமுறை நிகழ்ச்சிகளைப் பெருங்கதை, மணநூலாகிய சீவக சிந்தாமணித் திருமணங்கள், கம்பராமாயணக் காட்சிகள் முதலியவற்றில் நுணுகி யாராய்ந்துணரலாம்.

# 3. தமிழர் சமூக வாழ்க்கை

பேராசிரியர் அர. சு. நாராயணசாமி நாயுடு,
செந்திக் குமார நாடார் கல்லூரி, விருதுநகர்

தமிழர் வாழ்க்கையின் பல கூறுகளைப் பற்றி அறிஞர் பலர் ஆய்ந்தெழுதுகின்றனர். ஆதலின் தலைப்புப் பெரிதாகத் தோன்றினும் சில கூறுகளைப் பற்றிச் சில கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாம்.

**1**

தெளிவாக அறிந்துகொள்ள முடியாத மிகப் பழங்காலத்தே தமிழர் தமிழ்நாட் டெல்லையுளகப்படாத பல நில மக்கட் சமூகங்களொடு ஓரளவு தொடர்புகொண்டு விட்டனர். ஈழ நாட்டார், வடுக நாட்டார், வடவடுக ராகிய ஆரியர், மிலேச்சர், யவனர் இவர்களைத் தமிழர் நன்கறிந்திருந்தனர். தமிழ்நாடு கடல் கடந்து பல நாடுகளொடும் வணிகத் தொடர்புடையதா யிருந்தது. பிற பல நாட்டார் இந்நாட்டில் வந்து வதிவாராயினர்.

தமிழ் மூவேந்தர் திறம்படப் 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' ஆய எல்லா முடையராய் அரசோச்சிப் பிற நாடுகளிலும்

நன்கறியப்பட்ட காலமே கி. மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னதாதல் வேண்டு மென்பது அசோகன் கற்றூண்களாலும் காரவேலனது ஹாதிகும்பக் கல்வெட்டாலும் அறிப்படுவதொன்று.

இன்று நமக்குக் கிடைத்திருப்பனவாய பழைய இலக்கண விலக்கியங்களால் இந் நிலையுடையராயிருந்தனர் தமிழர் என்பது தெளிவாகிறது.

இப்பழ நூல்களையாய்ந்தால் இதனினும் முன்னைய நிலையும் ஓரளவு அறியப்படுதலாம்.

அகத்திணை பற்றிய இலக்கணக் குறிப்புக்களால் ஐந்திணைப் பிரிவும் அவ்வத்திணைக்குரிய முதலுரிகருப் பொருள்களு மறிகிறோம். கருப் பொருளில் ஒரு பகுதியாக மக்களைக் கூறுங்கால், தலைமக்கள் நில மக்களென்ற பகுதியினரை யறிகிறோம். ஆயினும் அவ்வத்திணைக்குரிய அரசராவாரைப்பற்றி யேதுமறிந்திலோம்.

நாட்டு நடப்பு மாறிக் காலப்போக்கிலமையினும் அது நூலகத்திடம் பெறல் மிகத் தாழ்த்தேயாம்.

தமிழ்நாடு சிறுசிறு கூறாகப் பிரிந்து அவ்வக் கூற்றிலுள்ள பெரும்பான்மையான மக்களின் தலைவரே சாதித்தலைவராக அரசோச்சிய காலத்தையிலக்கணக் குறிப்புகளறிவிப்பன வாகலாம். முடியுங் குடையுமிலராய்ச் சாதித் தலைவர்களாய் மழவர் கோமான், களவர் கோமான் முதலியோர் நாட்டுத் தலைவராயாண்டமையைச் சங்க நூல்களாலும் அறிகிறோம்.

இவ்வாறு மழவர், களவர் முதலிய பல சாதி அல்லது குடியினர் தத்தங் குடிக்குத் தனியாட்சி கொண்டு விளங்கிய

நெடுங்காலத்தின் பின்னரே அவர்கள் குடியாட்சியைச் சிறுகச் சிறுகத் தேய்த்து முடிவேந்தர் கோலோச்சும் நிலை முதிர்ந்திருக்கும்.

சங்க நூல்களாலறியப்படும் வேளிர் முதலியோருடைய ஆட்சிக் கூறுகளைத் தமிழ்நாட்டுப் படத்திற்குறித்து நோக்கின் போக்குவரவுக்கு வசதியில்லாத மக்கள் நிலைத்துள்ள கோடி கொடங்குகளில் கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை இக்குடி யாட்சிகள் நிலைத்து வலுவொடு திகழ்ந்தமை பெறப்படும்.

எனவே தமிழர் சமூகம் முதலில் குடித் தலைவரது ஆட்சியுள் நின்று, பின்னர்க் குடித் தலைவர், முடியரசர் இவ்விருவராலும் ஆளப்பெற்றுக் காலப்போக்கில் வேத்தாட்சிக்குட்பட்டமையைக் காண்பதற்கு இதுவரை கூறியவை யிடந்தரலாம்.

## 2

ஆட்சிவகை இவ்வாறு மாறி வளர்ந்தமை போன்றே சாதிப் பிரிவுகளும் வளர்ச்சியுற்றிருக்கலாம்.

அகத்திணை மக்களாகப் பார்ப்பார், அரசர், வணிகர் வேளாளரிவர் குறிக்கப்பட்டிலர். எனினும், தொல்காப்பியத்திலே இவர்களைப் பற்றிய குறிப்புக்களுள்ளன.

வளைவு, சுற்று என்று தமிழ் மக்கள் தங்கள் குடியிருப்புக்கும் பெயர் தந்ததுள்ளனர். பெரிதாக வளைத்துக் கட்டப்பட்டு ஒரு குடியினர் வாழுமிடமே வளைவெனப் பட்டது போலும். ஒருவனைச் சுற்றிலும் வதியும் இயல்பினர் அவன் சுற்றமே போலும். இவ்வாறான தனிநிலை மாறிப் பொருள் தேடல், இடம் நாடல் முதலிய காரணங்களால் சமூகம் சார்நிலை பெற்றுப் பெருகிய

போது, சில தொழில்களிற் சில கூட்டங்கள் திறன் பெற்றோராய்த் தனிநிலை பெற்றிருப்பர்.

அந்நிலையிற் பழநூல்களிற் பாணன், பறையன், பொருநன், மறவன் என்ற தொழிற்றிறக் கூட்டங்களைக் காண்கிறோம். அவர் தம்முள்ளே கொள்வன கொடுப்பனவாய உறவால் தனிச் சாதியினராயினர். வடவாரியர் தொடர்பிற்றான் பார்ப்பனர் முதலிய பிரிவுகள் இங்கே கொள்ளப்பட்டிருக்க வேண்டும். சங்க நூல்களில் பார்ப்பனரைப் பற்றிய குறிப்புக்கள் அவர்கள் இந்நாட்டிற் குடியேறி இந்நாட்டுப் பழக்க வழக்க மரபுகளில் முழுத் தோய்வு பெறாதாராகவே காட்டுகின்றன.

'நால்வேத நெறி' யூபம் நட்டு வேள்வி செய்தல் முதலியன பிறர் கலப்பாற்றமிழர் சமூகமறிந்த போதும் மேற்கொண்டபோதுமே 'நால் வருண' வெண்ணமும் வளர்ந்திருக்கும். சங்கப் பழம் பாடல்களில் இந்நிலையிந் நாட்டில் நுழைந்தமை குறிக்கப் பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் நால் வருணங்களும் அவற்றுள் முதலது இரண்டாமது மூன்றாமது முதலிய தெளிவான குறிப்புக்களும் காண்கிறோம். எனவே, கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் 'நால் வருணப்' பகுப்பு தெளிவான உருப் பெற்றுவிட்டது நம் நாட்டிலெனக் கொள்ளலாம்.

வலங்கையிடங்கைச் சாதிகள், அநுலோமர் பிரதிலோமர் பிரிவுகள் முதலியனவும் பத்தாம் நூற்றாண்டு முதலறியப் படுவனவாம்.

ஒரு கூற்றிலே யுறைந்த மக்கள் ஒரு சாதியினராயிருந்தது மாறிப் பலபட விரிந்து பல்வகை யுயர்வு தாழ்வுகளொடு சமூகங் காட்சியளிக்கத் தொடங்கிற்றுப் பத்தாம் நூற்றாண்டில்.

அதன்பின் தெலுங்கர், கன்னடர் முதலியோர் நாட்டிற் பல்கினர். புதிய பிரிவுகள் வளர்ந்தன. இன்றோ எண்ண முடியாத பல சாதிகளாகத் தமிழர் சமூகம் பிரிந்து கிடக்கிறது.

முகம்மதியர் கிறிஸ்தவர் முதலியோர் தொடர்பும் அதன்முன்பே ஜைன பௌத்த மத நுழைவும் பிற்காலத்தில் மேலைப் புலக் கருத்துக்களின் அறிவுமாகிய இவை பரவியிச் சாதிகளின் பிரிவுக் கொடுமையைத் தலைதட்டி வைத்துள்ளன.

தமிழ்நாடு காலப்போக்கில் விளைந்த அறிவியல் வளர்ச்சியாலும் வேறு பல மாறுதல்களாலும் நிலப்பரப்பு மொழிவகை யிவை தேய்ந்து ஓரில்லமெனத் தோற்றமளிக்கு மிக்காலம் தமிழரெல்லோரும் ஒரே சாதியினரென்று கொள்ளத் தக்க பெருநிலையினைச் சிறுகச்சிறுக வளர்த்தே தீருமென நம்பலாம்.

## 3

பாண்டிய நாட்டிலே சங்கங்கள் உயர்ந்தனவென ஒரு நம்பிக்கை தமிழரெல்லோரிடையும் பரவியுள்ளது. வேந்தரும் வேளிரும் கற்றுத் துறைபோய புலவர்களைச் சுற்றமெனப் பேணியமை பழநூல்கள் காட்டும். இசையுங்கூத்தும் வல்ல பாணர் பொருநரிவரும் பெருமதிப்புக் குரியராய் வாழ்ந்தமையும் அந்நூல்களா லறியலாம்.

இந்நாட்டு மக்களது கல்விநிலையைப் பற்றிக் கருதுவோம்.

சங்க வரலாறு, இலக்கண நூற்பாயிரங்களிலே கூறப்படும் ஆசிரியரிலக்கணம், மாணவரிலக்கணம் இவற்றை நோக்கின் தமிழர் சமூகம் கல்வியறிவு பெற்றுத் தழைத்ததொன்றே யென

வெண்ணலாம். மதுரைக் கணக்காயனார் முதலிய பெயர்களாலும், இறையனாரகப் பொருளுரை ஆசிரியர் மாணவர்க் குரைத்து வழிவழியாக வந்து பின்னரெழுதப்பெற்ற தென்பது கொண்டும், 'கந்தனைய னையவர்கலை தெரிகழகங்'கள்பற்றி நம் பெரும் புலவர்கள் குறிப்பது கொண்டும் தமிழர் கல்வி கற்று ஆராய்ச்சியுடையராயிருந்தன ரெனலாம். கல்வியின் பெருமையையும் கற்கவேண்டுவதன் இன்றியமையாமையையும் குறளேயன்றி வேறு சில சங்கப் பாட்டுகளுங் கூறுகின்றன.

எனினும், பழநூல்கள் தவிரப் பிற சான்றுகளெல்லாம் நம்மை வேறொரு வழியில் எண்ணத் தூண்டுகின்றன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை தமிழ்க் கல்வெட்டுக்கள் காணக் கிடைத்தில. தமிழ் நாட்டிற் காணப்படும் பழைய குகைக் கல்வெட்டுக்கள் பிராமி யெழுத்தி லெழுதப்பட்டுள்ளன. இவையும் பெரும் பாலும் ஜைன பௌத்தச் சார்பான குறிப்புக்களையே உடையன.

ஜைனம் பௌத்தம் வேதநெறியாகிய இவை தமிழர் சமூகத்திற் பரவியபின், தமிழ் நாட்டில் சமஸ்கிருதக் கல்வி பற்றியே பல குறிப்புக்களுள்ளன. தமிழிலக்கண இலக்கியப் புலமையூட்டும் பள்ளிகளைப் பற்றி யெதுவுந் தெரிந்திலது.

இத்தகைய மோகந் தமிழர் சமூகத்திலேற்படக் காரணமென்ன வென்பதையறிஞர்கள் ஆராயவேண்டும். காரணமெதுவாயினும் தமிழர் சமூகத்தின் தனிநிலையை பெரு நிலையை இக்கல்வி யேற்பாட்டுக் குறைபாடு குறைத்த தென்பதிலையமில்லை.

'நால் வருணப் பிரிவு' நமக்கு மேற்றதே யென்று கொண்டபின் தமிழர் முதல் வருணத்தார்க்கே கற்குமுரிமையையும் விட்டுக் கைக்கட்டி நின்றனர் போலும். கல்வி யேற்பாடுகளில் இருந்த குறையையும் எதிர்த்துக் கம்பர், சேக்கிழார் செயங்கொண்டார், புகழேந்தி போன்ற பெரும்புலவர் இடைக் காலத்து விளங்கியமை தமிழர் சமூகக் கல்வியவாவின் உறுதியையே காட்டத் தக்க சான்று போலும்.

தமிழர் சமூகத்தில் மேற்படிகளில் நின்றோர் மட்டுமன்றிக் கீழ்ப்படியினருந்து தங்கொள்கைகளை யறிய வேண்டுமென்று ஜைன பௌத்த வைதிகர்கள் கருதிய காலத்தேதான் அக்கொள்கைகள் நிரம்பிய தமிழ் நூல்கள் வெளிவரலாயின.

காஞ்சியிலே கடிகையிருந்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே அது விளங்கியமை தெரிகிறது. அங்கே பார்ப்பனரே வேத முதலியன கற்றனர்.

காவேரிப்பாக்கத்தில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வைணவப் பிராமணர் படிப்புக்கு வசதியளிக்கும் மடமிருந்தது.

பதினொான்றாம் நூற்றாண்டில் நாகைக் கடிகை ஆசிரியர் பலரையுடையதாய் மாணவர் பலருக்கு உண்டியுமுறையுளுமுதவி வேத சாத்திரக் கல்வியளித்தது. இந்நூற்றாண்டில் இம்முறையி லமைந்த படிப்பிடங்கள் எண்ணாயிரம், திருபுவனி, திருமுக்கூடல் முதலிய இடங்களிலும், அமைந்திருந்தன. திருவாடுதுறையில் சமஸ்கிருதத் திலுள்ள ஆயுர்வேத நூற் கல்வி கற்பிக்கும் பள்ளியொன்றிருந்தது.

தமிழ் மன்னர் இப்பள்ளிகட்கு இறையிலியாக நில முதவியதோடு வேறு பலவகையில் ஊக்கினர்.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையில் மதம் தத்துவ மிவை பற்றிப் பத்தாயிரம் மாணவர்கள் பயின்று வந்தனராம். எல்லோரும் பிராமணர்களாம்.

எனவே, களப்பிரர் குழப்பத்துக்குப் பின் சமஸ்கிருதக் கல்வி தமிழ் நாட்டில் தழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பல்லவரும் பாண்டியரும் சிறக்கச் செய்தனர். பதினெட்டாம் நூற்றாண்டுவரை யிந்நிலையில் பெருமாறுதலில்லை.

தத்தம் தொழிலைத் தங்குல வித்தையாகப் பயில்தல், விழா முதலிய சிறப்புக் காலங்களில் கற்றோர் எடுத்துரைப்பனவற்றைக் கேட்டு நல்லனவறிதல் என்ற நிலையில்தான் தமிழர் கல்வியிருந்தது.

தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வதிந்து தமிழ் நாட்டுக் குடிகளாகி விட்டவர் எவரெனினும் தமிழரே. அவர் தமிழர் சமூகத்துக்குப் புறம்பானவரல்லர். முன்பொரு காலத்தே பலப்பல காரணங்களால் ஆரியர், தெலுங்கர், கன்னடர், ஹிந்துஸ்தானிகள், மராத்தியர்கள் என்போர் இங்கே வதிந்தும் இங்கே வேர் கொள்ளாது தாமரையிலை மேற்றண்ணீர் போல இருந்திருக்கலாம். அக்காலமும் அந்நிலையும் மலையேறிவிட்டன. பழந்தமிழர், வந்து குடியேறியோர் கொள்கைகளை யொப்பித் தம்மைப் தாழ்த்திக்கொண்டு நின்றனர். தமிழ்நாட்டடரசரும் சமஸ்கிருதக் கல்விக்குத் தழைப்பு நல்கி ஊரார் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்றிருந்தனர். நல்லறிவு இந்தப் பொய்க் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து விட்டது.

இன்று இங்கு நிலைத்து வாழ்வோர் எல்லோருந் தமிழர். இவருள் உயர்வு தாழ்வுகளும் படைத்துக்கொள்ளப்பட்டனவே. அவையும் பட்டு மாய்ந்த கொண்டிருக்கின்றன. படிப்பதற்குரியோர் இன்னவர் என்னும் வரையறை யிருந்த இடந்தெரியாது அழிந்துபோயிற்று.

எனவே 'எல்லோரும் தமிழர்' என வெழுச்சியோ டெண்ணித் தமிழ் மொழி பேணி வளர்த்துத் தமிழராயோர்க்கு வேண்டுவதாய் பரந்துபட்ட அறிவு முழுவதையுந் தமிழிலே கற்றுப் பெருமை பெறலே இன்றுள்ள நிலைக் கேற்றதாம். பழம் பாடங்களை வரலாற்றாலுணராது இன்றும் தமிழுரையாளும் நிலையுடைய தமிழர்தம் மொழியைத் 'தானே வளரும்' என்று விட்டு ஊரார் மொழிகளை 'யூட்டி வளர்ப்பர்' எனின் அது தகுவதாமா? நம் நாட்டுக் கல்வியின் முன்னைப் பழம் பெருமையையும் பின்னுண்டாய இழிவையுங் கண்டு எண்ணிப் பார்த்துத் தக்கதே செய்வராக.

இக்கட்டுரை காட்டிய தமிழரசு பற்றிய குறிப்புக் காட்சிப் பழம் பொருளே. தமிழர் சமூகச் சாதி பற்றிய குறிப்பும் கல்வி பற்றிய குறிப்பும் எதிர்காலத்துக்கேற்ற நற்பாடங்களை யேற்க வுதவுவனவாக.

# 4. தமிழர் ஆடை அணிகள்

*திருமதி ஆர். இராஜாமணி,*
*மேரி அரசிக் கல்லூரி, சென்னை*

ஒரு நாட்டினர் அணியும் ஆடையணிகள், அந்நாட்டு நாகரிகத்தின் சின்னமாக விளங்குகின்றன. பண்டைத் தமிழரது நாகரிகத்தை, அக்காலத்திலிருந்த புலவர்கள், என்றும் அழியாத சொல்லோவியமாகத் தீட்டியுள்ளனர். எனவே, அன்னாரது வாழ்க்கைக் கண்ணாடியாக விளங்கும் சங்க இலக்கியத்தின் துணை கொண்டு, அவர்கள் அணிந்திருந்த ஆடையணிகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்:

உலகின் பல்வேறு பகுதிகளிலுமிருந்த மக்கள் நாகரிகமற்று வாழ்ந்த காலத்தில், பழந்தமிழர் சிறந்த ஆடையணிகளை யணிந்து, சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். அவ்வாடைகள், பெரும்பாலும் பருத்தி நூலால் ஆனவை. அவை, இழை தெரியாதவாறு மிகவும் நெருக்கமாகவும், மென்மையாகவும் நெய்யப்பட்டன. அவற்றிற் குவமையாக, பாலாவி, புகை, பாம்பின் சட்டை, மூங்கிலின் மெல்லியதோல் முதலியவற்றைப் புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். இதினின்றும், நம் நாட்டில் நெசவுத்

தொழில் ஒருகாலத்தில், உச்சநிலையிலிருந்திருக்கவேண்டும் என்பது புலனாகின்றது. ஆடை நெய்வதற்கு வேண்டிய நூலைப் பெரும்பாலும் கைம்மை நோன்பை மேற்கொண்டிருந்த பெண்கள் நூற்றனர். ஆகவே, அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். ஆடைகள் தறியினின்றும் அறுக்கப் பட்டமையால் அறுவை யென்னும் பெயர் பெற்றன. நமது உடலைச் சுற்றியிருப்பது என்ற பொருள்கொண்ட 'புடைவை' என்னும் பெயரும் ஆடைக்கு உண்டு. இச்சொல்லானது ஆடவர், மகளிர் ஆகிய இருதிறத்தாரது ஆடையையும் குறிக்கும். இதனை சமண சமயத்தைத் தழுவியிருந்த மருள் நீக்கியார் சூலைநோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது, தாம் முன்பு அணிந்திருந்த பாயுடையைக் களைந்து விட்டு, வெண்புடைவை மெய்சூழ்ந்து தன் தமக்கையாரைக் காணவந்தார் என்னும் பெரியபுராணச் செய்தி விளக்காநிற்கும்.

'கலிங்கம்' என்ற சொல்லும் ஆடையைக் குறிப்பதாகும். கடையேழு வள்ளல்களில் ஒருவனான பேகன், கார் காலத்தில் மயில் ஆடுதல் கண்டு, அது குளிரால் வருந்துகிறதெனக் கருதி, தனது போர்வையையெடுத்து அதற்குப் போர்த்தினான் என்பதை,

**'கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய பேகன்'**

என்னும் அடியினின்றும் அறியலாகும்,

கொட்டைக்கரை போடப்பட்ட உயர்ந்த பட்டாடைகள், பரிசில்பெறச் சென்ற பாணர்கட்கு, அரசர்களால் வழங்கப்பட்டன. ஆற்றுப்படைகளில் இதற்குச் சான்று காணலாம். பூவேலையுடன் கூடிய நிறமூட்டப்பட்ட ஆடைகளும் அக்காலத்தில் நெய்யப்பட்டன என்பதை,

**'நீலக்கச்சை பூவாராடை'**

என்னும் அடி விளக்குகிறது.

சிறுமியர் அணியும் ஆடை, சிற்றாடை எனப்படும். மழையில் நனைந்து வந்த ஔவையாருக்குப் பாரி மகளிர் நீலச் சிற்றாடை கொடுத்து உதவினர். காலத்தினாற் செய்த அவ்வுதவிக்கு மாறாக,

'பாரி பறித்த கலனும் பழையனூர்க
காரி யன்றீந்த களைக்கோலும்-சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்''

என்னும் அழியாத பாட்டைப் பாடிப் போந்தார் ஔவை மூதாட்டி. மெல்லிய நீலநிற ஆடைக்குமேல், முத்துக்களினாலாகிய 'விரிசிகை' யென்னும் இடையணியை மாதவி அணிந்திருந்தாள். எழுகோவை, எண்கோவை, ஒன்பது கோவை, பதினாறு கோவை மணியென, இடையணி பலதிறப்படும். நீலநிறமானது, வெண்மணிகளின் ஒளியை எடுத்துக்காட்டுகிறது. பழங்காலத்தில், முத்துக்கோப்பவர், நீலத்துகிலில் அவற்றை வைத்துக்கொண்டு கோத்தனர். மண மண்டபத்தின் விதானம் நீலப்பட்டினாலும், பந்தல் முத்தினாலும் அமைக்கப்பட்டன என்று மங்கல வாழ்த்துக் காதை கூறுகின்றது. நீலவானில் விண்மீன்கள் விளங்குவதும், முத்து, வயிரம் போன்ற மணிகளினால் செய்யப்பட்ட அணிகள் நீலப்பட்டினலாகிய பேழைகளில் வைக்கப்படுவதும் நாம் காண்பனவாகும். துறவறத்தை மேற்கொண்டோர் காவியாடையுடுத்தல் மரபு. இதனை, 'முல்லைப்பாட்டு' போன்ற நூல்களிற் காணலாம்.

இன்னும், முழந்தாள் வரையில் அணிந்துகொள்ளும் 'வட்டுடை' என்னும் உடையும் அக்காலத்தில் இருந்தது. காமன்

ஒருகாலத்தில் ஆடிய பேடியாடலை யாடிய ஒருவன், வட்டுடை தரித்திருந்ததாக மணிமேகலை மலர்வனம்புக்க காதையில் கூறப்பட்டுள்ளது.

மற்றும், தழையுடையென்னும் விசேட உடையும் பழங்காலத்தில் உண்டு. அவ்வுடை, இளந்தளிர்களினாலும், மலர்களினாலும் ஆயது. அதைப் பெண்கள் அழகுக்காக ஆடையின்மீது அணிந்து கொள்வர். தழையுடையானது, தலைமகனால், தலைமகளுக்குத் தோழியின்மூலம் காணிக்கை யாகக் கொடுக்கப்பட்டது என்பதற்கு, அகத்துறை நூல்கள் சான்று பகரும்.

பண்டைக் காலத்தில், பட்டாடைகளும் நெய்யப்பட்டன என்பது முன்னரே கூறப்பட்டது. சரிகை கலந்து நெய்யப்பட்ட மஞ்சள் நிறப் பட்டாடை, 'பீதாம்பரம்' என்றும், 'பொன்னாடை' என்றும் பெயர் பெற்றது. இக்காலத்திலும், சிறந்த அறிஞர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டும் வழக்கம் இருந்து வருகிறது. எலிமயிர், ஆட்டுரோமம் முதலியவற்றைக் கொண்டு நேர்த்தியான கம்பளங்கள் நெய்யப்பட்டன. இவ்வாறு சுமார் முப்பத்தாறு வகை ஆடைகள் அக்காலத்தில் இருந்ததாய்க் கூறப்பட்டுள்ளது. இன்னும், உடை தைக்கும் தையற்காரர்' 'துன்னகாரர்' என்னுந் பெயருடன் இருந்திருக்கின்றனர். நூற்றுவர் பின்தொடரவந்த பாண்டி நாட்டுப் பொற்கொல்லன், சட்டை யணிந்திருந்ததாய்த் தெரிகிறது. இது, 'மெய்புகுபை' என்பதினின்றும் விளங்குகிறது. இனி, தமிழரின் அணிகளைப் பற்றி ஒரு சில கூறுவோம்.

பழங்காலத்தில் ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை, சாதரூபம் என்னும் நால்வகைப் பொன்னும் நவமணிகளும் மிகுதியாக

இருந்தன. அவற்றைக் கொண்டு பற்பல விதமான அணிகலன்கள் செய்யப்பட்டன. பொன்னால் அணி செய்பவர் 'உருக்குத் தட்டார்' என்றும். பொன்னையும் மணியையும் பிரியாதவாறு இணைத்து இழைப்பவர் 'பணித்தட்டார்' எனவும் கூறப்பட்டனர். பொன்னையும் மணியையும் சேர்த்து இழைப்பதால் அதற்கு 'இழை' என்னும் ஒரு பெயருமுண்டு. ஒன்பதுவகை மணிகளின் இலக்கணத்தை நன்கு அறிந்த பணித்தட்டார் பலர் அக்காலத்தில் இருந்தனர். வடமலையிற் பிறந்த பொன்னும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், தென்கடலில் கிடைத்த முத்தும், காவிரிப்பூம்பட்டினத்துக் கடைத்தெருவில் குவிந்துகிடந்தன. அவ்வாறே, பாண்டி நாட்டுத்தலை நகராம் மதுரை மாநகரத்து ஆவணி வீதியில், குற்றங் குறைபாடற்ற நவமணிக் குவியல்கள் காணப்பட்டன.

அணிகளை, குழந்தைகள் அணி, ஆடவர் அணி, மகளிர் அணி என மூன்று வகையாகப் பிரிக்கலாம். குழந்தைகட்குப் பாதுகாவலாக, 'ஐம்படைத்தாலி' என்னும் அணி, அணிவிக்கப்பட்டது. காதற் கடவுளாகிய திருமாலின் சங்கு, சக்கரம், வில், வாள், கதை முதலிய ஐந்து படைகளையும் சிறு வடிவத்தில் பொன்னால் செய்துகோத்துக் கழுத்திலிடுவார்கள். முருகனுக்கு எடுக்கப்பட்ட விழாவைக் காணும் பொருட்டு, காவிரிப்பூம்பட்டினத்தில் ஆடவரும் மகளிரும் குழுமியிருந்தனர். குழந்தைகள் அணிந்திருந்த ஐம்படைத்தாலியை, அவர்கள் வாயினின்றும் சிந்திய உமிழ்நீர் நனைத்தது என்று மணிமேகலை யாசிரியர் கூறியுள்ளார். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மிகுந்த இளம் பருவத்திலேயே போர்க்களஞ் சென்றான் என்பதனை,

'தாலி களைந்தன்று மிலனே'

என்னும் புறப்பாட்டின் அடி உணர்த்தும். சிறுவர், புலிப் பல் தாலியும் அணிந்திருந்தனர். இக்காலத்தில், புலி நகத்தைப் பொற் சங்கிலியில் கோத்து மகளிரும் அணிந்து கொள்ளுகின்றனர். சதங்கை போன்ற காலணிகளைச் சிறுவர் அணிந்திருந்தனர் என்பது 'பொற்கால் புதல்வர்' என்னும் பட்டினப் பாலைச் சொற்றொடரால் விளங்குகின்றது.

அரசரும், வீரரும் வீரத்துக்கு அறிகுறியாகக் காலில் கழலும் தோளில் வாகுவலயம் என்னும் வளையலும் அணிந்து போருக்குச் செல்வர். இவற்றைப் பற்றிய குறிப்பு புறநானூறு போன்ற நூல்களில் காணப்படுகிறது. பகையரசர்களை வென்ற மன்னர்கள். தோல்வியுற்ற மன்னரது முடியிலுள்ள பொன்னைக் கொண்டு கழல் செய்து, தாம் அவரை வென்று அடிப்படுத்தியதற்கு அடையாளமாக அணிந்து கொள்வர். இவையன்றி, அரசர்கள் பொன்னாலும் மணியாலும் ஆன விலையுயர்ந்த முடிக்கலன், மாலை முதலியவற்றையும் அணிந்திருந்தனர். மேலும், அவர்கள் போருக்குச் செல்கையில், பொன்னால் செய்யப்பட்ட அடையாள மாலைகளை அணிந்து சென்றனர்.

பழங்காலத்தில் பலவகை அணிகலன்கள் இருந்தபோதிலும், இக்காலத்து நாகரிக மகளிரைப் போலவே பழந் தமிழ் மகளிரும், சிறந்த ஒரு சில அணிகளையே அணிந்தனர். அதனால் அன்னார் 'ஆயிழை' எனப்பட்டனர். அவ்வணிகள் முற்றுப்பெற்ற வேலைப்பாடு உடையனவாக இருந்தமையால், 'முற்றிழை' என்னும் பெயர் பெற்றன. பெண்கள் சாதாரணமாக, சங்கு வளையல் பொன்வளையல் போன்றவற்றை அணிந்திருந்தனர்.

இதனை, 'ஒண்டொடி' 'பைந்தொடி' 'பொற்றொடி' என்னும் சொற்கள் விளக்கும். காதில் மகரக்குழை அணிந்திருப்பர். முடக்கு என்னும் நெளிமோதிரம் அக்காலத்தில் அணியப்பட்டது என்பது நெடுநல் வாடையினின்றும் விளங்குகிறது. இக்காலத்திலும், மணிகள் வைத்துப் பொன்னால் செய்யப்பட்ட நெளிமோதிரம் அணியப்படுகிறது. முடமோசியார் பாடலொன்றில் காணப்படும்,

**'ஈகை யரிய இழையணி மகளிரொடு**
**சாயிற் றென்ப வாஅய் கோயில்'**

என்ற அடிகள், அக்காலத்தில் மணமான பெண்டிர் மங்கலநாண் அணிந்திருந்தனர் என்று கருத ஏதுவாயுள்ளன.

பெண்கள் காலில் அணியும் சிலம்பு பொன்னாலாயது. நடக்கும்போது ஓசை யுண்டாவதற்காக, விலையுயர்ந்த மணிகள் அதன் உள்ளே பரலாக இடப்பட்டன. கண்ணகியினது சிலம்பின் பரல் மாணிக்கம் என்பதையும், கோப்பெருந்தேவியினது சிலம்பின் பரல் முத்து என்பதையும் வழக்குரை காதை விளக்கா நிற்கும்.

ஆடல் பாடல்களிற் சிறந்தவர்களாகிய மாதவி தலை முதல் கால்வரையில் பல்வகை அணிகலன்களை அணிந்திருந்தாள். அவற்றுள், பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, காற்சரி என்பன காலணிகள். சித்திரவளை, மணிவளை, பவளவளை முதலியவை வளைகளிற் சில வகைகளாகும். கழுத்தில் வீரச் சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்தாரம் முதலியன அணியப்பட்டன. தெய்வவுத்தி, வலம்புரி, பூரப்பாளை, வடபல்லி, தென்பல்லி என்பன தலைக்கோலங்களாக விளங்கின. இன்னும் ஈண்டுக் கூறா தொழிந்தவை பல.

வறுமை காரணமாக, பழுமரந்தேரும் பறவைபோல அரசர்களையும் வள்ளல்களையும் நாடிச்சென்ற பாணர்கள்,

வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்றாமரைப் பூக்களையும், விறலியர் அணிகலனுக்கு வேண்டிய பொன்னையும் பரிசிலாகப்பெற்று வந்தனர்.

அணிகலன்கள், பெண்களது இயற்கையழகை மிகுதிப் படுத்துகின்றன என்பர் ஒரு சாரார். இயற்கையழகினால் அணிகலன்கட்குச் சிறப்பு ஏற்படுகிறது என்பவர் மற்றொரு சாரார். அணிகளின்றியே அழகு மிகுந்து தோன்றும் என்பர் இன்னொரு வகையினர்.

**'கூடல் மகளிர் கோலங் கொள்ளும்**
**அடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்**
**செய்யாக்கோல மொடு வந்தீர்**
என்னும் சிலப்பதிகார அடிகளும்,

**'புனையா வோவியம் போல நிற்றலும்'**
என்னும் மணிமேகலையடியும் இறுதிக் கூற்றை வலியுறுத்து கின்றன.

மக்கள் அணிகலன்கள் அணிந்திருந்தது மாத்திரமன்று; யானையின் நெற்றியில் ஓடை யென்னும் பொன் முக படாத்தையும், அதன் மறுப்பில் 'கிம்புரி' என்னும் பூணையும் அணிவித்தனர். பாண்டிநாட்டைச் சேர்ந்த பிசிராந்தையார் என்னும் புலவர், அன்னச் சேவலை நோக்கி, "நீ குமரியினின்றும் வடக்கே செல்கையில் இடையிலுள்ள உறையூரில் தங்கி, கோப்பெருஞ்சோழனைக் கண்டு, நீ என்னுடைய அடியின்கண் உறைபவன் எனக்கூறுவாயேல், அவன், உன்னால் அன்பு செய்யப்படும் பேடைக்கு வேண்டிய அணிகலன்கள் அளிப்பான்" என்றார். பறவைகள், அணிகள் அணிவதில்லை. எனவே, காணாமலே நட்புக்கொண்ட தன் ஆருயிர்

நண்பனாம் பிசிராந்தையின் பெயரைக்கேட்ட அளவில், சோழன் மிக்க மகிழ்ச்சியடைந்து பரிசில் வழங்குவான் என்பதே அதன்பொருளாகும்.

பழங்காலத்திலிருந்த அணிகலன்களிற் பல இக்காலத்தில் இல்லை. அப்படியிருப்பவற்றின் பெயரும் சரியாகத் தெரியவில்லை. நாட்டியக்கலையை ஆதரித்து வருபவர், பழைய அணிகளுள் கிடைத்தவற்றைப் பாதுகாக்கின்றனர். ஏனெனில், அவ்வக்காலத்து ஆடல் பாடல்களை நிகழ்த்துகையில், அவ்வவற்றிற்கேற்ற ஆடையணிகள் அணிதலே ஏற்புடைத்து. வாளைமீனின் அங்காந்த வாய்போன்ற நெளிமோதிரமும், அகலக்கரை போடப்பட்ட ஆடைகளும் தொன்மையைக் குறிக்கும் என்பர்.

ஒரு காலத்தில், நம்நாட்டு ஆடைகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டிநாட்டு முத்தானது, உரோமாபுரி, எகிப்து போன்ற நாட்டு மன்னரது முடியை அலங்கரித்ததாக, யாத்ரீகரது குறிப்பில் காணப்படுகிறது. அத்தகைய தமிழ்நாடு பிறநாடுகளினின்றும் ஆடையை எதிர்பார்த்து ஏங்கி நிற்கவேண்டிய நிலை சமீபகாலம் வரையில் ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணம், தமிழர் நெசவுத் தொழிலை இடையில் செய்யாது விட்டுவிட்டதே யாகும். அத்தொழிலானது மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. பெருத்த ஆதரவும் அதற்கு அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, 'உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்னும் அமரகவி பாரதியாரின் பொன் மொழியை அனைவரும் கருத்தில் இருத்தி, தொழில்செய்ய முற்படுவாராயின், நெசவுத்தொழில் மீண்டும் பழைய உன்னத நிலையை அடையும் என்பது ஒருதலை.

# 5. தமிழர் நாகரிகம்

*வித்துவான் து. கண்ணம்மாள்*
*பாத்திமா கல்லூரி, மதுரை*

## நாகரிகம்: சொற்பொருள்

நாகரிகம் என்னும் சொல்லுக்குக் 'கண்ணோட்டம் என்பது பொருள் என்று திருக்குறள் கூறுகின்றது[1]; நகரத் தொடர்பான ஒழுக்கம் என்று பெருங்கதை பேசுகின்றது[2]; 'மரியாதை' என்னும் பொருளை உடையது என்று சிவ ரகசியம் செப்புகின்றது[3]; பலகலை வல்லோரை 'நாகரிகர்' என்று சீவக சிந்தாமணி குறிக்கின்றது[4]; இலக்கியம், கலை முதலியவற்றை இரசிப்பவர் நாகரிகர்' என்று நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் நவில்கின்றது[5]; நகர மக்கள்' என்று திவாகரமும், சமர்த்தர் என்று பிங்கலமும் பேசுகின்றன.

இவையனைத்தையும் ஒருசேரப் பார்க்கும்போது, கல்வி, கலை உணர்வு, கண்ணோட்டம், மரியாதை முதலியவற்றின் திரட்சியே 'நாகரிகம்' என்பது, என்று கூறலாம். இவ்விலக் கணத்தை உளம் கொண்டு, பழந்தமிழர் நாகரிகத்தை ஓரளவு இங்குக் காண்போம்:

## கல்வி

பழங்காலத் (சங்ககாலத்) தமிழர் இக்காலச் சாதி வேறுபாடுகள் இன்றி வாழ்ந்தவர். மன்னரும் 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்ற முறைப்படி கல்வி கேள்விகளில் அறிவுடைய மக்களையே மதித்தனர். இன்னவர் படிக்க வேண்டும், இன்னவர் படித்தலாகாது என்ற வரையறை இல்லாததால், அக்காலத்தில் சமுதாய மக்கள் அனைவரும் கல்வி கற்றிருந்தனர். வளமனை காத்த காவற்பெண்டு, குறமகள், குயத்தி, பாணச்சி முதலிய சாதாரணப் பெண்மணிகளும் நல்லிசைப் புலமை மெல்லியலாராக விளக்கமுற்றிருந்தனர். அதியமானிடமிருந்து தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றார் என்பதை நோக்க, அக்காலப் பெண் கல்வியின் திறத்தை என்னென்பது! பெருங்காக்கை பாடினியார், சிறு காக்கை பாடினியார் என்ற பெண்பாற் புலவர் யாப்பிலக்கண நூல் செய்தனர் என்பது அக்காலப் பெண்ணுலகச் சிறப்பை நன்கு உணர்த்துகின்ற தன்றோ! அரசரிருவரும் போரிட்ட போர்க்களத்திலும் ஔவையார் இருந்து தம் அரசனை ஊக்கப்படுத்தினார் என்பதை நோக்க, படித்த பெண்கள் அரசனால் மதிக்கப்பட்ட திறத்தை நன்கறியலாம்.

இங்ஙனமே பலதுறை ஆடவரும் கல்வி கற்றுச் சிறந்திருந்தனர் என்பதைச் சங்ககால நூல்களால் அறிகிறோம். முடி மன்னராகிய சேர, சோழ, பாண்டியர்களும், அவர்தம் மனைவியர்களும், மக்களும் தாய்மொழியிற் சிறந்திருந்தனர். முடி மன்னரும் சிற்றரசரும், பெருநிலக்கிழாரும் இயற்றமிழில் வல்ல புலவரையும், இசைத் தமிழில் வல்ல பாணரையும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் நன்முறையில் ஆதரித்து முத்தமிழைப் பேணி

வந்தனர் என்பதைப் பண்டை நூல்களால் அறிகின்றோம். பாண்டிய மன்னர் தம் கோநகரில் புலவரைக் கூட்டிச் சங்கம் அமைத்துத் தமிழை வழிவழிக் காத்து வளர்த்து வந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. நாகரிகத்தின் அடிப்படை கல்வியே என்று அறிஞர் கூறுவர். சங்க காலத்தில் அவ்வடிப்படை மிகச் சிறந்த நிலையில் அமைந்திருந்தது என்பதை மேற்காட்டிய உண்மைகள் நன்கு உணர்த்தும்.

## தொழில்கள்

கல்வியில் தெளிவினால் தமிழர் உழவு, கைத்தொழில், வாணிகம் முதலிய வாழ்வியல் நிலைகளில் தலை சிறந்து விளங்கினர். திருக்குறளிலுள்ள 'உழவு' என்னும் அதிகாரம் பழந்தமிழர் பயிர்த்தொழில் அறிவை நன்கு தெரிவிக்கும். உழுதொழிலுக்கு அடுத்து உயர்ந்த தொழிலாகக் கருதப்பட்டது 'நெய்தல்' தொழிலேயாகும். பருத்தி, எலி மயிர், ஆட்டு மயிர் முதலியவற்றால் ஆடைகள் நெய்யப்பட்டன. ஆடைகளில் பூத்தொழில் செய்யும் வழக்கமும் இருந்து வந்தது. மிக நுட்பமான நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகள் பாம்பின் சட்டை போலவும் மூங்கிலிருந்து உரிக்கப்பட்ட மெல்லிய தோல் போலவும் புகையைப் போலவும், பால் நுரையைப் போலவும், தெளிந்த வெண்ணிறமுள்ள அருவிநீர் போலவும் இருந்தன என்று பண்டை நூல்கள் பகருகின்றன. கோசிகம் முதல் பணிப் பொத்தி ஈறாக முப்பத்தாறு வகைப்பட்ட ஆடைகள் சிலப்பதிகார உரையில் காட்டப்பட்டுள்ளன.

சங்க காலப் பெண்கள் அணிந்து வந்த அணிகள் பலவாகும். அவற்றைச் செய்து வந்த உருக்குத் தட்டாரும், பணித் தட்டாரும் பலராக இருந்தனர். அப்பொற்கொல்லர் மாணிக்கம், நீலம், வைரம்

முதலிய ஒன்பான் மணிகளைப் பற்றிய இலக்கணங்களை நன்கு அறிந்திருந்தனர். அவை பற்றிய நூல்களும் அக்காலத்தில் இருந்தன. கன்னார், செம்பு கொட்டிகள், தச்சர், மரத் தொழிலாளர், கப்பல் கட்டுவோர், துணி துவைப்பவர், தோலைக் கொண்டு பல தொழில் செய்பவர், நெட்டித் தொழிலாளர், முத்துக் கோப்பவர், சங்கு முதலியவற்றால் வளையல் செய்பவர், பல வகைப்பட்ட இசைக் கருவிகள் செய்பவர், ஓவியம் தீட்டுவோர், சிற்பியர் முதலிய பலதிறப்பட்ட தொழிலாளரும் சங்க காலத்தில் வாழ்ந்தனர்.

## வாணிகம்

பிளைநி, தாலமி, பெரிப்ளூஸ் ஆகியோர் வரைந்துள்ள குறிப்புக்களும், சங்கநூற் குறிப்புகளும் சங்ககாலத்துக் கடல் வாணிகம் சிறப்புற நடந்து வந்ததைக் குறிக்கின்றன. பழந்தமிழ் வணிகர் மேல்நாடுகளுடனும் கீழ் நாடுகளுடனும் சிறந்த முறையில் கடல் வாணிகம் செய்து வந்தனர். தமிழகத்து அரிசி, மயில், மிளகு, முத்து முதலியன வெளிநாடுகட்கு ஏற்றுமதியாயின. அயல் நாடுகளிலிருந்து பவளம், மணப்பொருட்கள், பலவகைப் பொறிகள், குடிவகைகள் என்பன தமிழகத்தில் இறக்கு மதியாயின. தமிழகத்துத் துறைமுகங்களான தொண்டி, முசிரி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் முதலிய நகரங்களில் அராபியர், கிரேக்கர், உரோமர், சீனர் முதலியோர் தங்கி வாணிகம் செய்தனர்.

தமிழகத்தில் உள்நாட்டு வாணிகமும் சிறப்புற நடந்தது. வணிகர்கள் எருது, கோவேறு கழுதை இவற்றின்மேல் பண்டப் பொதிகளை ஏற்றிக்கொண்டு கூட்டம் கூட்டமாய் ஊரூராகச்

சென்று வாணிகம் செய்தனர். அக்கூட்டம் 'வாணிகச் சாத்து' எனப்பட்டது. தமிழ் வேந்தர்களும் இவ்வணிகர்க்குத் தக்க பாதுகாப்பளித்தனர். இவர்கள் தமிழகத்தின் வட எல்லையாகிய வேங்கடத்தைக் கடந்து தெலுங்கு, கன்னட நாடுகளிலும் அவற்றுக்கு அப்பாற்பட்ட நாடுகளிலும் சென்று வாணிகம் செய்தனர். அறிவிற் சிறந்த தமிழரசர் வாணிகத்தைத் திறம்பட நடத்திய வணிகர்க்கு 'எட்டி' என்ற பட்டத்தையும் பொற்பூவையும் அளித்துச் சிறப்பித்தனர். சேரர் தலைநகரான வஞ்சிமாநகர், பாண்டியர் கோநகரான மதுரை, சோழர் தலைநகரான பூம்புகார் என்ற பெருநகரங்களில் இருந்த பெரிய கடைத்தெருக்களில் அயல்நாட்டுப் பண்டங்கள் குவிந்து கிடந்தன. அக்கடைத் தெருக்களில் இன்னின்ன பொருள்கள் விற்கப்பட்டன என்பதைச் சிலப்பதிகாரமும பிறவும் சிறப்புறக் கூறுகின்றன.

## உணவு

குறிஞ்சி நிலமக்கள் மலைநாட்டு விளை பொருள்களை உணவாகக் கொண்டனர். மலைநாட்டுப் பொருள்கள் இன்னவை என்பதைச் சிலப்பதிகாரம்–வஞ்சிக் காண்டம் காட்சிக் காதை நன்கு தெரிவிக்கின்றது. முல்லை நிலத்து ஆயர், பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை மருத நிலத்தில் விற்றுத் தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டனர், மருதநிலத்து மக்கள் நெற்சோற்றையும், பலவகைக் காய்களையும், கனிகளையும் உண்டு வந்தனர். நெய்தல் நில மக்கள் பிற நிலத்தாருடன் மீன் வாணிகம் செய்து தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களைப் பெற்றனர். இங்ஙனம் நானில மக்களும் தத்தம் நிலத்தில் விளையாத பொருள்களைப் பிறரிடம் பெற்று வாழ்ந்து வந்தனர்.

## கட்டடக்கலை

மனிதனது உள்ளத்தில் நிரம்பிப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றலே கலை என்பது. இவ்வாற்றல் கட்டடமாக வெளிப்படும்; காவியமாக வெளிப்படும்; ஓவியமாக வெளிப்படும்; சிற்பமாக வெளிப்படும்; இசையாகவும் வெளிப்படும் உள்ளத்து உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் நடனமாகவும் வெளிப்படும். காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்தில் ஓர் அற்புத மண்டபம் இருந்தது. மகதநாட்டு மணி வேலைக்காரரும் அவந்தி நாட்டுக் கொல்லரும், மகாராட்டிரத்தைச் சேர்ந்த பொன் வேலைக்காரரும், யவன நாட்டுத் தச்சரும், தமிழ் நாட்டுத் தொழில் அறிஞரும் ஒன்று சேர்த்து அம்மண்டபத்தை அமைத்தனர். அதன் தூண்கள் பவளத்தால் இயன்றவை; போதிகைக் கட்டைகள் பலவகை மணிகளால் சமைந்தவை; மண்டபத்தின் ஒவ்வொரு கோணத்திலும் முத்து மாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. மேற்கூரையும் கீழிடமும் பொன்னால் இயன்றவை. எனவே, தரைப்பகுதி சந்தனத்தால் மெழுகப்பட்டிருந்தது.[6]

மக்கள் வாழ்ந்த உயர்ந்த மாடங்களில் நிலா முற்றங்கள் அமைந்திருந்தன. தெருக்களின் அடியில் கண்ணுக்குத் தெரியாதபடி பெரிய கழிநீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. பெரிய நகரங்களில் பூங்காக்களும் இயந்திர வாவிகளும் அமைந்திருந்தன.

## ஓவியக்கலை

ஓவியம் வல்லாரைக் 'கண்ணுள் வினைஞர்' என்று மதுரைக் காஞ்சி கூறுகின்றது. 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்பது இதன் பொருள்.

நடன அரங்கின் மேற்கூரையில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. கட்டடச் சுவர்கள் மீது தேவர், மக்கள் ஓவியங்களையும் பல கதைகளை விளக்கும் கண்கவர் ஓவியங்களையும் தீட்டுதல் தமிழர் மரபு. அக்காலத்தார் ஓவியங்களை அமைத்துப் பல ஆடைகளை நெய்து வந்தனர். அக்காலத்தில் ஓவியக்கலை பற்றிய நூல் வழக்கிலிருந்தது. அதனை நாடக மகளிரும் நன்கு பயின்று வந்தனர். கோவில் மண்டபங்களில் புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன.

## சிற்பக் கலை

போரில் தன் ஆற்றலைத் தோற்றி விழுப்புண் பட்டு இறந்த வீரனுக்கு அறிகுறியாக ஒரு கல்லை நட்டு, அதனில் அவனது உருவத்தைப் பொறித்தல் தமிழ் நாட்டு வழக்கம் இதனைச் சிற்பக் கலையின் தொடக்கமென்று கூறலாம். கண்ணகியின் சிலை அமைக்கப்பட்டதைக் கொண்டும் இதனை உணரலாம். சங்க காலக் கோவில்களில் பல தெய்வ உருவங்கள் அமைக்கப் பட்டிருந்தன. சுதை கொண்டு உருவங்களை அமைக்கும் பண்ணிட்டாளரும், கல்லில் உருவங்களை அமைக்கும் சிற்பத் தொழிலாளரும் சங்க காலத்தில் வாழ்ந்தனர்.

## இசைக்கலை

இசைத் தமிழ் சங்க காலத்தில் நன்கு வளர்க்கப்பட்டது. பெரநாரை, இசை நுணுக்கம் முதலிய இசைத் தமிழ் இலக்கண நூல்களும், சிலப்பதிகாரம், பரிபாடல், கலித்தொகை போன்ற இசைத் தமிழ்ச் செய்யுள் நூல்களும் சங்க காலத்தவை. குரல், துத்தம், கைக்கிளை, உழை, கிளி, விளரி, தாரம் என்னும் ஏழு

சுரங்கள் தமிழில் இருந்தன. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பண் வகைகளும், அவ்வப் பொழுதிற்கமைந்த பண்களும், பண்களிலிருந்து பிறக்கும் திறங்களும் இவை பற்றிய குறிப்புக்களும் சங்க நூல்களில் காணலாம். தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என இசைக் கருவிகள் நால்வகைப் பட்டன. பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் எனப் பலவகை யாழ்கள் வழக்கில் இருந்தன. பாணர், பாடினியர் இசைத்தமிழில் ஏற்றம் பெற்றிருந்தனர்.

## நடனக்கலை

நடனம் சங்க காலத்தில் 'கூத்து' எனப் பெயர் பெற்றிருந்தது. மலை நாட்டு மக்கள் முருகனை வழிபட்டு ஆடிய கூத்துக் 'குன்றக் குரவை' எனப்பட்டது. முல்லை நிலத்து மகளிர் கண்ணனை வழிப்பட்டு ஆடிய கூத்து 'ஆய்ச்சியர் குரவை' எனப் பெயர் பெற்றது. பாலை நில மக்கள் கூத்து 'வேட்டுவ வரி' எனப் பெயர் பெற்றது. மெய்ப்பாடுகள் தோன்ற நடித்து உள்ளக் குறிப்பைப் புறத்துக் காட்டும் திறமை பெற்றவள் 'விறலி' எனப் பெயர் பெற்றாள். இத்தகைய விறலியரையும் கூத்தரையும் தமிழ் வேந்தர் பெரிதும் ஆதரித்தனர். சிறந்த கூத்தி 'தலைக்கோலி' என்ற பட்டத்தைப் பெற்றாள். நடன மக்கள் ஏழு வயதுமுதல் பன்னிரண்டு வயதுவரை கூத்து கலையில் பயிற்சி பெறுதல் வேண்டும். அவளை அத்துறையில் பயிற்சி பெறுவிக்க ஆடலாசிரியன், இசையாசிரியன் என்பவர் தேவைப்பட்டனர். இவர்களைப் பற்றியும் கூத்து வகைகளைப் பற்றியும் கூத்தியரைப் பற்றியும் சிலப்பதிகாரம் முதலிய பண்டைய நூல்கள் பரக்கப் பேசுகின்றன.

## சமய நிலை

பழந்தமிழ் மக்கள் கடவுள் நமபிக்கையுடையவர். ஒவ்வொரு பேரூரிலும் பலவகைக் கோவில்கள் இருந்தன. சைவம், வைணவம், பௌத்தம், சமணம் பற்றிய கோவில்கள் விளங்கின. மக்கள் தமக்கு விருப்பமான சமயக் கொள்கைகளைப் பின்பற்றினர். கோவில்களில் விழாக்கள் சிறப்புற நடைபெற்றன. விழாக்களில் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன. சமயவாதிகள் ஒருவரோடொருவர் பூசலிடாமல் தத்தம் சமயத்தைப் பரப்பி வந்தனர்.

## நாகரிகத்தின் உயர்வு

மக்கள் தாம் வாழும் குடும்பத்தையும், சமுதாயத்தையும், நாட்டையும்,உலகையும் தம் வாழ்வுக்குத் தேவையான பிறவற்றையும் அறியவும், அறிந்து நல்வழியில் நடக்கவும் கல்வி இன்றியமையாதது. பழந்தமிழ் மக்கள் கல்வித் தெளிவினால் பயிர்த் தொழில் போன்ற பல தொழில்களைத் திறம்படச் செய்தனர்; வாணிகத்தை வளம்பெற நடத்தினர்; 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த கொள்கையைப் பின்பற்றினர்; தொழிலிலும் வாணிகத்திலும் அறநெறி தவறாது நடந்தனர். "தீதும் நன்றும் பிறா தர வாரா' (மனிதன் ஆவதும் அறிவதும் தன்னாலேதான்) என்னும் விழுமிய கருத்தை அழுத்தமாக உணர்ந்து நடந்தனர்; கட்டடக் கலையிலும், இசை, கூத்து போன்ற நுண்கலைகளிலும் பண்பட்டு இருந்தனர்; உண்மையுடைமை, ஒழுக்கமுடைமை, அன்புடைமை, அருளுடைமை முதலிய நற்பண்புகளைப் பெற்று நலமுற வாழ்ந்தனர். சுருங்கக் கூறின், சங்ககாலத் தமிழ் மக்கள், "வையத்து வாழ்வாங்கு' வாழ்ந்தனர். இங்ஙனம் 'வையத்து வாழ்வாங்கு' வாழ்பவரே 'நாகரிக மக்கள்' என்று அறிஞர் கூறுவர்.

# 6. பழந்தமிழர் சமயம்

*சைவ சித்தாந்தக் கலாநிதி,*
*பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை*
*தியாகராஜர் கல்லூரி*

பழந் தமிழர் என்ற சொற்றொடர் நம் கண்ணிலும் காதிலும் பட்டவுடனே நமது நினைவு தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகிய நூல்கள் எழுந்த காலத்துக்கு நம்மைக் கொண்டு செல்லுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கைக் கூறுகள் நம் மனக் கண்ணில் தோன்றுகின்றன. அவர்களின் சமய உணர்வு ஒழுக்கங்களை உணர்தற்கெனச் சில சொற்களும் சொற்றொடர்களும் சிறந்த சான்றுகளாக அக்கால நூல்களில் நின்று நம் அறிவைப் பணி கொள்கின்றன. அந்நாளைய கல்வெட்டுக்களோ ஓவச் செய்திகளோ பிறவோ கிடைக்கவில்லை நல்லிசைப் புலமைச் சான்றோர் சிலர் அவ்வக்காலத்தில் பாடிய பாட்டுக்கள் சிலவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனப் பண்டையோர் தொகுத்துள்ளனர். அவை பலவும் தேர்ந்து கொள்ளப்பட்ட ஒரு சில சான்றோர்களின் சிலவும் பலவுமாகிய பாட்டுக்களாதலால் அவற்றைக் கொண்டு வரலாற்று முறையில் வைத்துச் சமய உண்மைகளைக் காண்பது அரிதாகவுளது.

தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும் சங்க இலக்கியங்களும் அக்காலத்தே நிலவிய உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்குகளையும் முதலாகக் கொண்டு எழுந்தவை. "தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்" என்றே தொல்காப்பியத்துக்குப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் குறிக்கின்றார். இவ்விருவகை வழக்குகளில் நிலவிய சமயக் கொள்கைகளைக் காண்பதே நமது முன்னிற்கும் பணியாகிறது.

சமயவாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை கடவுட் கொள்கையாகும். கடவுள் ஒருவர் உண்டு என்ற உணர்வும், அவரை வாழ்த்தி வழிபட்டு இயலுவது சமய வாழ்வு என்ற கருத்தும் சமயத்தின் உட்கிடை. இவற்றை மேற்கொண்டு ஒழுகுவது சமய வாழ்வாகும் என்பது நாடறிந்த கொள்கை. சமயத்தின் தோற்றம் மிகமிகத் தொன்மையான மக்கள் இயற்கையில் கண்ட பெரு நிகழ்ச்சிகளால் உள்ளத்தே கொண்ட அச்சமும் அவலமும் காரணமாகக் கொண்டது என்பர் வரலாற்றறிஞர். அச்சத்திற் கருவுற்றெழுந்த சமயம், இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐந்துக்கும் அப்பாலாய் அவற்றை ஆக்கிப் படைத்து ஆட்டி வைக்கும் முதற் பொருள் ஒன்று உண்டு என உணர்ந்து அதற்கும் உலக வாழ்க்கைக்கும் தொடர்பு அமைத்து, அதனை உணர்ந்து இனிது ஒழுகச் செய்யும் முறையில் நல்ல தொண்டாற்றியிருக்கிறது. அந்த முதற் பொருளைப் பழந்தமிழர் கடவுள் என்றும், இயவுள் என்று வரும் இரண்டு சொற்களால் குறித்துள்ளனர். "கடவுள் வாழ்த்து" "பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்" என்ற தொடர் மொழிகள் யாவரும் நன்கு

அறிந்தன. கடவுள், இயவுள் என்ற சொற்கள் கடத்தல், இயக்குதல் என்ற பொருட்குரியன. அக்குள் விக்குள் என்றாற் போல இவையும் கடவுள் இயவுள் என்று இயலுவதால், உள்ளும் புறமும் கடந்து நிற்பது, இயக்கி நிற்பது என்று பொருள்பட்டுக் கடவுள் எனப்படும் முதற் பொருள் என்பது எல்லாப் பொருட்கும் உள்ளும் புறமும் கலந்து நின்று இயக்குவதும், அவற்றைக் கடந்து நின்று அவற்றின் செயல் முறைகட்கு ஆணை செலுத்துவதும் செய்தொழுகுவது என்ற கருத்தை உணர்த்துகின்றன.

இக்கடவுட் கொள்கைக்கு நிலைக்களம் உயிரும் உலகமும் ஆகும். உலகமாவது, 'நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம்' என்பது தொல்காப்பியம். சமயச் சூழ்நிலையில், 'காலம் உலகம் உயிரே உடம்பே, பால்வரை தெய்வம் வினையே பூதம், ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம் ஆயீரைந்தும்' சிறந்த பொருள்களாக நிற்கின்றன. உயிர்கள் புல் பூண்டுகளாகிய ஓரறிவுயிர் முதல் மக்கள் ஈறாக ஆறு வகையாகப் பிரிகின்றன. இவ்வுயிர்கள் யாவும் "மன்னுயிர்" என்றும் "தொல்லுயிர்" என்றும் சிறப்பிக்கப் படுவதால் அவை கடவுளாகிய முதற் பொருளால் படைக்கப்படாமல் அப்பொருளே போல என்றும் நிலை பேருடைய உள்பொருளாகும். ஏனை உலகமும் உலகிலுள்ள பொருள்களும் அம்முதற் பொருளால் படைக்கப்படுவனவாம். கடவுளை முதற்பொருள் என்று குறிப்பதோடு, "உலகு இயற்றியான்' எனவும், "உலகு படைத்தோன்" (நற்.240) எனவும் குறித்திருப்பது இக்கருத்துப் பற்றியேயாம்.

உயிர்கள் இன்ன உரு இன்ன நிறம் என்று சொல்ல வொண்ணாத உருவுடையன; ஆயினும் அவை உலகியற் பொருள்களான உடம்பையும் ஏனைப் பொருள்களையும்

இயக்குவதும் அவற்றோடு கூடி இயங்குவதும் செய்வன; அவ்வியக்கத்தால் அவற்றிடையே வினைகள் தோன்றி நிலவுகின்றன. 'வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' என்று நூலோர் கூறுகின்றனர். செய்யும் தொழிலுக்கேற்ப ஊதியமும் உறையுளும் அமைவது போலச் செய்யும் வினைக் கேற்ப உயிர்கட்கு நுகர்ச்சியும் உடம்பும் அமைகின்றன. உடம்பையும் நுகர்பொருளையும் படைத்து அளிக்கும் வகையில் முதற் பொருளாகிய கடவுள் மேன்மையுற்று விளங்குகிறார். இதனால் கடவுட்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு படைப்போனுக்கும் படைக்கப்படுபொருட்கும் உள்ள தொடர்பாய்க் கடவுளை உலகைத் தனக்குரியதாகக் கொண்ட உடையவனாகவும், உலகம் அவனது உடைமையாகவும் நிறுத்துகிறது. உயிர்கள் உலகிடைத் தோன்றும் உடம்பை இடமாகக் கொண்டு வினை (தொழில்) செய்து பயன் பெறுவதால் இவ்வுலகம் உயிர்களின் பொருட்டே படைக்கப்பட்டு அவற்றிற்கு உதவப்பட்டிருப்பது என்பது பழந்தமிழர் சமயக் கொள்கை. இதனால் கடவுட் பொருட்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பு உதவி செய்வோனுக்கும் உதவி செய்யப்பட்டோர்க்கும் உள்ள தொடர்பாய், உதவி பெற்றோன் உதவி செய்தோனுக்குக் கடமைப்பட்டு அவன் நன்றியினை நினைந்தொழுகுவது போல உயிர்கள் கடவுளது அருளை நினைந்து வழிபட்டொழுகுவது கடனாகும் என்பதை வற்புறுத்துகிறது. இதனால்தான் தொல்காப்பியனார் கடவுள் வாழ்த்துப் பகுதிக்குச் சிறப்பாக இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளார்.

உயிர் வகையுள் மக்களைத் தனிப்பட நிறுத்தி உயர்திணை உயிர் என்றும், ஏனை உயிர் வகையை அஃறிணையுயிர் எனவும்

பழந்தமிழர் கொண்டனர். 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே' என்பது தொல்காப்பியம். மக்களினத்துள் அடங்காமல், கடவுளாகிய முதற் பொருளுமாகாமல் இரண்டற்கும் இடைப்பட்ட நிலையில் தெய்வங்கள் காணப் படுகின்றன. இவை மக்களுயிர் போல மனவுணர்வும் வினை செய்தலும் இன்ப துன்ப நுகர்ச்சியும் உடையவாய்ப் பிறத்தலும் இறத்தலும் செய்வன. இவற்றின் செயல் முறையும் வாழ்க்கையும் மக்களுயிரின் மேனிலையில் உள்ளன. "தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி' மக்கள் இனத்தன அல்ல வாகலின் "இவ்னெ அறியும் அந்தம் நமக்கு இல' என்றும், சொல்லுலகில் "உயர்திணை மருங்கின்பால் பிரிந்து இசைக்கும்" என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் வகுத்துரைக்கின்றார்.

பழந்தமிழர் சொல்லுலகை உயர்திணை அஃறிணை எனக் கொண்டாற் போலப் பொருளுலகைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக வகுத்துக்கொண்டனர். இப்பகுதியுள் வாழ்ந்த மக்கள் முறையே குன்றவர், ஆயர், வேளாளர், பரதவர், எயினர் எனக் குறிக்கப்பெற்றனர். அவர்களைத் திணை நிலை மக்கள் என்பது வழக்கம். அவரவர் வாழ்க்கைக்குரிய உணவு, தொழில் முதலியன தனித்தனியே உள்ளன. அவற்றோடு சமயவொழுக்கத்தைக் கூட்டி மேலே குறித்த தெய்வங்களையும் ஒவ்வொரு பகுதிக்கும் உரிமை செய்துள்ளனர். குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்கு மாயவனும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் தெய்வமாவர். இவர்கட்கு நாட்பூசனையும் விழாவும் வழிபாடும் செய்வது சமய வொழுக்கமாகிறது. கடவுள் என்பது இத்தெய்வ வகைகட்கு மேற்பட்டு நின்று எல்லாம் முழு

முதற் பொருளாக நிலவுகிறது. எல்லா நிலப் பகுதிகட்கும் நீர் தீ வளி விசும்பு ஆகிய அனைத்திற்கும் மேலாய் எல்லாம் தன் ஆணை வழி நிற்கப் பண்ணுவதுபற்றிக் கடவுட் பொருட்கெனத் தனியே நிலம் கிடையாது; எல்லா நிலங்களிலும் இக்கடவுட் குறிப்புப் பொதுவாகக் காணப் படுவதொன்றே இதற்குப் போதிய சான்று.

குறிஞ்சி நிலத்து முருகன் முதலாய தெய்வவகை எல்லாவற்றிற்கும் தோற்றம் நிலை வேறு கூறப்படுவது போலக் கடவுளாகிய முதற் பொருளுக்குத் தோற்றமும் ஈறும் கூறப்படுவதில்லை. இப்பொருளைக் குறிக்கும் போதெல்லாம் சங்க இலக்கியங்கள் பிறை முடியும், முக்கண்ணும், கறைமிடறும் உடையனாகக் குறிக்கின்றன. இதனால் இன்று சிவம் என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் இவ்வடையாளங்களைத் தன்பால் கொண்டிருப்பது கொண்டு, சிவ பரம்பொருளே பழந்தமிழர் சமயத்துறையில் நிலவிய கடவுள் என்பது தெளிவாகத் தோன்றுகிறது. தெய்வங்கட்குத் தோற்றமும் கடவுட்கு அது கூறப்படாமையும் நோக்கின், பிறவா வாழ்க்கைப் பெருமையுடையது கடவுள் என்றும், பிறந்து நிலைவேறு கொண்டு இயலுவன தெய்வங்கள் என்றும் பழந்தமிழர் கருதிய கொள்கைகளாகின்றன.

மக்கள் வாழ்வில் வினையுணர்வும் மறு பிறப்பும் வீடு பேரின்பமும் நிரயத் துன்பமும் சொல்வழக்கில் நிலவுகின்றன. மக்களுடைய மனம் மொழி உடம்பு மூன்றின் அசைவு அசைவின்மைகளால் வினைகள் தோன்றுகின்றன. வினையில்லாத உயிரே உலகில் இல்லை. ஒவ்வொரு வினைக்கும் பயன் உண்டு. இன்பம் பயப்பது நல்வினை; துன்பம் தருவது

தீவினை. நல்வினை செய்தோர் இன்பத்துக்கும் தீவினை செய்தோர் துன்பத்துக்கும் உரியவராவர். வினை உயிரோ. உணர்வோ இல்லாததாகலின், அது தானே சென்று வினை செய்தவனுக்கு உரிய பயனை நல்குவதில்லை. வினை செய்தோனுக்கு வினைப் பயன் அவனையே அடைதற்குரிய தொழிலைச் செய்யும் வகையில் தெய்வங்கள் பணி புரிகின்றன. அதுபற்றியே அவற்றைப் 'பால்வரை தெய்வம்' என்று சான்றோர் குறிக்கின்றனர். செய்யப்படும் வினைப் பயன்களுக்கேற்ப உயிர்கட்கு இம்மை மறுமை வீடுபேறு என மூவகையுலகுகள் காட்டப்படுகின்றன. வினை செய்தற்குரிய உலகம் நாம் வாழும் மண்ணுலகம். நல்வினைப் பயனை நுகர்தற்குரிய மறுமை உலகம் நிரயம் என்றும் வினைத் தொடர்பினின்றும் அறவே நீங்கி விளங்கும் அறிவுடைச் சான்றோர்க்குரியது வீடு பேறு என்றும் பழந்தமிழர் கருதினர்.

வினை தோன்றும் போதே அதன் பயனும் உடன் தோன்றுகிறது. வினை முடிவில் அதன் முழுத்த பயன் உருவாகி வினை செய்த ஒருவனை அடையும் நிலையை எய்துகிறது. அவன் அப்பயனை நுகரும் வரை அவனுக்கு அஃது ஊழ்கனிபோல் நின்று நுகர்ச்சிக்குரிய காலம் வந்ததும் தெய்வத்தின் ஆணையால் அவனை எவ்வகையாலேனும் அடைந்து விடுகிறது. அதனால் அதனை ஊழ்வினை என்று அறிஞர் அறிவிக்கின்றனர் ஊழ்வினையை ஊட்டுவிக்கும் பணி கடவுட் பொருளின் ஆணைவழி இயங்கும் தெய்வங்களின் செயலாதலால், தெய்வ வழிபாட்டால் வினைப்பயனது நுகர்ச்சி காலவகையில் வேறுபடும் என்ற கருத்துப் பண்டையோர் கொண்டிருந்தனர். குன்றவர் முருகனுக்கு வழிபாடாற்றி வேட்டம் செல்வதும், ஆயர்

மாயோனுக்குக் குரவையாடி வழிபாடு பற்றுவதும், வேளாளர் இந்திர விழா எடுத்தலும், பரதவர் சுறவுக்கொடு நட்டு வருணனுக்கு வழிபாடு செய்து மீன் வேட்டம் புரிவதும், கொற்றவையை வழிபட்டு எயினர் மறத்தொழில் செய்வதும் சங்க இலக்கியங்களில் காணப்படுவது இது பற்றியே யாகும்.

உலக வாழ்வில் காணப்படும் உயிர்கள் அனைத்துக்கும் இன்பம் பெறுவது ஒன்றே குறிக்கோளாகும்.

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பதுதான் அமர்ந்து**
**வரூஉம்மே வற்றாகும்"**

என்பது தொல்காப்பியம். இந்த இன்பப்பயன் பெறுவது குறித்தே உலக வாழ்வு நடைபெறுகிறது; உயிர்களால் செய்யப்படும் வினைகள்யாவும் இக்குறிக்கோளையே நாடி நிற்கின்றன. இந்த இன்பப் பயன்பெறுவது பற்றித் தோன்றும் வினை இடையீடு படுமிடத்தும் இடையூறு எய்துமிடத்தும் அவற்றை நீக்கும் செயல்வகைகளில் மக்களின் அறிவும் முயற்சியும் பெரிதும் ஈடுபடுகின்றன. இடையீடும் இடையூறும் அவ்விரண்டின் எல்லையைக் கடந்து போகிறபோது சமயவுணர்வும் வழிபாடும் தோன்றுகின்றன. பெரு மழை, மழையின்மை, கடுங்காற்று, கொடு விலங்கு, பெரும் பகை முதலியவற்றால் இடையூறு உண்டாகுமாயின் மக்கள் தெய்வ வழிபாட்டில் சிறந்து நிற்கின்றனர். பெருமழைக்கு வருந்திய மலையுறை குறவர்,

**"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்**
**மாரி யான்று மழைமேக் குயர்கெனக்**
**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல்கண் மாறிய உவகையர்"** *(புறம்.143)*

எனச் சான்றோர் குறிப்பது காண்க. செய்யும் வினை காரணமாகத் தோன்றும் சமய வழிபாடு, வினையின் தொடக்கத்தில் இடையூறு கருதியும், இடையில் வந்த இடையூறு நீங்குவது கருதியும், முடிவில் வினைப்பயன் நல்கும் இன்பம் குறித்தும் நடைபெறுகிறது.

மக்களுடைய வாழ்வை அகம் புறம் என இரண்டாக வகுத்து முறை செய்து கொண்டவர் பழந்தமிழர். அகம் என்பது தனியே இருந்து வாழ்க்கை நடத்தும் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் ஒருங்கு பெற்ற ஒருவனும் ஒருத்தியும் ஒருவரை யொருவர் தனித்துக்கொண்டு காதலுறவு கொண்டு உள்ளத்தால் ஒன்றுபட்டு மணம் செய்து கொண்டு மனையறம் புரியும் ஒழுகலாறாகும். அக்காலத்தே தோன்றும் காதலுறவு இடையீடும் இடையூறும் எய்துமிடத்து, காதலர், மேனிக்கண் தோன்றும் வாட்டமும் மெலிவும் குறித்துத் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. குன்றவரிடையே நடக்கும் வெறியாட்டு இதற்குச் சீர்த்த சான்றாகும். புற வாழ்வு என்பது மனையறம் புரிந்தொழுகும் மக்களிடையே பொருளும் புகழும் போர் வென்றியும் பிறவும் பற்றி நிகழும் ஒழுகலாறாகும்.

புறவாழ்வின்கண், அகத்துறை இன்பம் நுகர்ந்தும் புறத்துறைப் புகழும் வென்றியும் எய்தியும் உவர்ப்புற்ற சான்றோர் 'சிறந்தது பயிற்றல்' என்னும் துறவு வாழ்க்கை மேற்கொள்வது பண்டைத் தமிழர் சமயக் கொள்கையாகும். 'காமம் சான்ற கடைக் கோட்காலை, ஏமம் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும், கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பது தொல்காப்பியம். இங்கு இறத்தல் என்பது வயது முதிர்தல். பொருள் இன்பங்களின் சுவை காணாத ஒருவன் துறவு

மேற்கோடல் என்பது தமிழர் சமயக் கொள்கைக்குப் புறம்பானது. இச்சான்றோர் இன்பமும் துன்பமுமாகிய இரண்டினையும் ஒரு சேரவுவர்ந்து வினையின் நீங்கி விளங்குபவராதலின், இவர்கட்குத் தெய்வ வழிபாடு கிடையாது. இவர்களால் வழிபடப்படுவது கடவுள் எனப்படும் முழுமுதற் பொருளேயாகும். அதனால் இத்துறவிகளையும் கடவுளர் என்பது பழந்தமிழ் மரபாயிற்று. சடை முடித்துப் பலகாலும் நீராடித் தோலுடுத்துக் காய்கனி கிழங்கு இலைகளை உண்டு காடும் குன்றுமாகிய இடங்களில் வாழ்வது துறவோர் நிலைமையாகும். இவர்கள் ஏனையோர் போல நல்வினை செய்து துறக்கவின்பம் பெற விழையாது உற்ற நோய் பொறுத்தலும் உயிர்கட்கு ஊறு செய்யாமையுமாகிய தவம் மேற்கொண்டு மெய்யுணர்ந்து அவாவறுத்து ஒழுகுவர். இப்பெருமக்களது வாழ்வு முழுதுமே சமய நெறியில் இயங்குதலால், இவர்கட்கெனத் தனி நிலையில் சமய வாழ்வும் வழிபாடும் இல்லை. இவர்கள் சொல்லுவனவும் நினைப்பனவும் யாவுமே கடவுட் பெரும் பொருளோடு கலந்து பிரிப்பின்றிப் பிறங்கும். இவர்கள் நெஞ்சின்கண் நின்று நிலவும் கடவுள், "பால்புரை பிறை நுதல் பொலிந்த சென்னி, நீலமணிமிடற்றுப்" பெரும் பெயர்க் கடவுள், முற்றுந் துறந்த முனிவரும் முடியுடைய மூவேந்தரும் தலைசாய்த்து வணங்கியது இக்கடவுளையேயாகும். "பணீஇயர் அத்தை நின்குடையே முனிவர் முக்கட் செல்வ நகர் வலம் செயற்கே' என்று சான்றோர் தெருட்டுதல் காண்க.

முழுமுதற் கடவுட்கும் மண்ணுலக உயிர்கட்கும் இடையே நிலவும் தெய்வங்கள், மக்களுடைய வழி பாட்டையேற்று அவர்கள் நலம் பெறத் துணைபுரியும் என்ற கருத்தால் பகைப்பொருளை

வெல்வதற்கும் துன்பத்தினின்றும் உயிர்களைக் காத்தற்கும் அத்தெய்வங்களின் தொடர்பு சமய வாழ்வில் சிறந்து நின்றது. மக்களுயிர்களுள்ளும் அல்லன கடிந்து நல்லனவே புரிந்தவை மறுமையில் தெய்வங்களாயினவும் உண்டு. இவ்வாற்றால் தெய்வங்களைப் பற்றிப் பலவேறு வரலாறுகள் சமயத்துறையில் காணப்பட்டன. அவற்றை இந்நாளில் புராண வரலாறுகள் என்பன வழக்கம். மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டெழுந்த பழந்தமிழ் இலக்கியங்களில் தெய்வங்கள் சார்பான புராண வரலாறுகள் பல உளவாயின.

குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனைப் பற்றிய வரலாறுகளில், அம்முருகன் தாமரைப் பூவில் பிறந்தான் என்பதை, "நிவந்தோங்கு இமயத்து நீலப்பைஞ்சுனைப் பயந்தோர் என்பது 'பதுமத்துப்பாயல்' என்று பரிபாடல் முதலிய நூல்கள் குறிக்கின்றன. கடலிடத்தே இருந்து குறும்பு செய்து உயிர்களை வருத்தித் திரிந்த சூரவன்மாவின் காவல் மரமான மாமரத்தைத் தடிந்து அவனையும் கொன்று முருகன் மேன்மையுற்றான் என்பதை,

**"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி**
**அணங்குடை யவுணர் ஏமம் புணர்க்கும்**
**சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்**
**கடுஞ்சின விறல்வேள்"**

என்று பதிற்றுப்பத்தும்,

**"அவுணர் நல்வலய் அடங்கக் கவிழிணர்**
**மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து**
**எய்யா நல்லிசைச் செவ்வேற் சேய்"**

என்று முருகாற்றுப் படையும் பிறவும் குறிக்கின்றன. "குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்த" முருகனைச் சிறப்பிக்கும் சான்றோர், வள்ளியை, "முருகுவுணர்ந்தியன்ற வள்ளி" என்றும், அவளுடைய பெற்றோரை, "குறிஞ்சிக் குன்றவர் மறற்கெழு வள்ளி தமர்' என்றும் எடுத்துரைக்கின்றனர்.

முல்லை நிலத்தெய்வமான மாயோன், கண்ணால் முல்லை நிலத்து ஆயரிடையே யமுனைக் கரையில் விளையாடிய வரலாறு,

**"வடா அது.,**
**வண்புனல் தொழுநை வார்மண லகன்றுறை**
**அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்**
**மரஞ்செல மிதித்த மாஅல்"**

என்றும், கஞ்சன் விடிப்புக் குதிரை வடிவில் வந்த அசுரனை வென்ற செய்தியை,

**"கயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகை கண்டை**
**மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை**
**வாய் புகுத்திட்டுப் புடைத்த ஞான்றுஇன்னன்கொல்**
**மாயோன் என்றுஉட்கிற்றுஎன் நெஞ்சு"**

என்றும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இவ்வாறே மருதத்துக்குரிய தெய்வமான இந்திரன், முருகன் முதலிய தெய்வங்கட்குப் படையுதவிய பண்பும், அகலிகை பொருட்டு மேனி முழுதும் கண் பெற்ற கதையும் பழந்தமிழரிடையே நிலவின. பாலைக்குரிய தெய்வமான கொற்றவையை முருகனுக்குத் தாய் என்றும், அவளே எல்லாத் தெய்வங்கட்கும் பழையவள் என்றும்

கூறுகின்றனர். தாருகன் உரம் கிழித்த தறுகண்மையும், எருமை வடிவில் வந்த அவுணனை வென்று சிறந்த வீறுடைமையும் அவள் செய்தியில் விளக்கம் பெறுகின்றன. வருணனாகிய நெய்தல் நிலத் தெய்வத்தைப் பற்றி ஒரு செய்தியும் பழந்தமிழ் நூல்களில் எவராலும் எவ்விடத்தும் கூறப்படவில்லை. இச்செய்திகளை விழாக் காலங்களில் மக்கட்குக் காவியங் கூறியும் ஓவியம் காட்டியும் இரைப்போர் இருந்திருக்கின்றனர். இதனை,

**'இந்திரன் பூசை இவள் அக லிகைஇவன்,**
**சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு**
**ஒன்றியபடி இதுஎன்று உரைசெய் வோரும்'**

உளர் எனப் பரிபாடல் பகர்வது காண்க.

இத்தெய்வங்கட்கெல்லாம் மேலாம் உலகு உயிர்களின் வேறாய் ஒன்றாய் உடனாய் நிலவும் கடவுள் நிலையில் சிவபரம் பொருளை வைத்து அவன் வடிவத்தை,

**'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீலமணி மிடற்று ஒருவன்'**

என்றும்,

**'பேரிசை நவிரம் மேஎய் உறையும்**
**காரியுண்டிக் கடவுள்'**

என்றும் கூறுவர். அவன் முப்புரம் எரித்த வரலாற்றை,

**'ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ**
**ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்**
**பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த**
**கறைமிடற் றண்ணல்'**

என்றும்,

**"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக**
**அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்**
**மடங்கல்போற் சினைஇ மாயம் செய அவுணரைக்**
**கடந்தடு முன்பொடு முக்கண்ணால் மூவெயிலும்**
**உடன்றான்'**

என்றும்

**"உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்**
**மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"**

என்றும் பழந்தமிழர் தம்முட் பாராட்டிப் பரவி வந்துள்ளனர்.

பழந்தமிழர் சமய வாழ்வில் கார்த்திகை விளக்கீடும், மார்கழித் தைந் நீராட்டும் பங்குனி உள்ளி விழாவும் சித்திரை இந்திர விழாவும், வேனில் விழாவும் பிறவும் சிறந்து விளங்கின. கார்த்திகை விளக்கீட்டு விழா இன்றைய தீபாவளியும் பொங்கற் புதுநாள் விழாவும் ஆகிய இரண்டின் சிறப்புக்களை ஒருங்கே தன்கண் கொண்டிருந்தது. இதனை,

**"மழைகால் நீங்கிய மாக விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர் மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர வருகதில் அம்ம"**

என்றும், இக்காலத்தே புதுமணமகளிர் புதுநெல் கொண்டு அவலிடித்துப் பாற்பொங்கல் இட்டு மகிழும் திறத்தை, இதே பாட்டில்,

"புதுமண மகடூஉ வயினிய கடிநகர்ப்
பல்கோட் டடுப்பிற் பால்உலை இரீஇக்
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை"

என்று நக்கீரனார் நவில்வதனால் நன்கு அறியலாம். மார்கழித் திருவாதிரை நாளில் தொடங்கித் தைப்பூசம் வரையில் நடைபெறும் தைந் நீராட்டு பரிபாடலில் பாரித்துக் கூறப்படுகின்றது. விசய நகர வேந்தர் காலத்துத் தோன்றிய மொழி நிலை உணர்வு வேறுபாட்டால் கார்த்திகை சீரழிந்தது; தீபாவளி புதிது தோன்றிற்று; தைந் நீராடல் தலை தடுமாறிற்று. வேனில் விழா காமன் பண்டிகையாயிற்று. இக் காலத்தில்தான் தெய்வ நிலையங்களில் வழிபாட்டில் வட மொழி இடம் பெற்றது. ஊர்ப் பெயர்களும் தெய்வங்களின் பெயர்களும் வடமொழியில் மாறின; பின்னர் மக்கட் பெயரும் வடமொழிப் பெயர்களாயின.

பழந்தமிழரிடையே சமய வழிபாட்டில் அவரது தமிழ் மொழியே நிலைபெற்றிருந்தது. தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன. அவற்றை நகர் என்றும் தேவ குலம் என்றும் வழங்கினர். மலை முடியும் கடற்கரையும் தெய்வங்களுறையும் கோயில் எடுக்கும் சிறப்புடைய இடங்களாயின. நவிர மலையின் முடியில் முக்கட் செல்வனுக்கு இருந்த கோயிலை மலைபடுகடாம் என்ற சங்க இலக்கியம் குறிக்கின்றது. இக்கோயில்கள் பலவும் மரத்தாலும் மண்ணாலும் பண்டை நாளில் கட்டப்பெற்றன. பல்லவர் காலத்தில்தான் கோயில்களைக் கருங்கற்களால் அமைக்கும் முறை உருக்கொண்டு சிறப்பதாயிற்று. சிவபரம் பொருள் எல்லாத் தெய்வங்கங்கட்கும் மேலாம் நிலையில் எல்லா நிலங்கட்கும்

பொதுவாய் இலங்குவது பற்றிச் சிவத்துக்கு எடுக்கும் கோயில்களில் சிவனை நடுவில் வைத்துக் குறிஞ்சிக்குரிய முருகனையும் முல்லைக்குரிய மாயோனையும் பாலைக்குரிய கொற்றவையையும் பிறவற்றையும் 'பரிவார தேவதைகள்' என்ற பெயரால் சூழவைத்துச் சமய ஒருமை கண்டவர் பழந்தமிழர்.

இவையேயன்றி, ஊர்தோறும் அன்பர்கள் கூடிப் பரவுமிடந் தோறும் தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன. இவற்றின் வேறாக,

**காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்**

தெய்வ வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. கந்துடை நிலை என்றது பிற்காலத்தே சிவலிங்கம் என மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. சிவவடிவம் கந்தும், அதன் பீடம் நிலையுமாகும். இவ்வுண்மையறியாத மடவோர் கந்தினை ஆண்குறி என்றும் நிலையினைப் பெண்குறி என்றும் பிதற்றினர். சிலர் இப்பேதைமையை மான வுணர்வின்றி எழுத்தால் வரைந்து விட்டனர் அறிவுடைமையாக எண்ணிப் பொய்க் கதைபுனைந்து மனத்தே தெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலியும் குருதி கலந்த சோறும் படைக்கப் படுவதுண்டு. எங்கும் விளக்குகளை ஏற்றித் தெய்வங்கட்கு நீராட்டிப் பூச்சூடி மணி இயக்கி நறும் புகை எடுப்பர்; அக்காலை பல வேறு வாத்தியங்களும் முழங்கும். பின்னர்ப் பலவேறு நிறமுடைய பூக்களைத் தூவி வழிபாட்டுக் குரிய செல்வங்களைப் பரவுவர். முருகனை வழிபடுவோர், கையால் தொழுது காலுற வணங்கி,

"நெடும் பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்தே ஆறமர் செல்வ,
ஆல்கெழு கடவுட் புதல்வ, மால்வரை
மலைகள் மகனே, மாற்றோர் கூற்றே,
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ,
இழையணி சிறப்பின் பழையோள் குழவி,
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர் புகழ் நன்மொழிப் புலவ ரேறே

அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேய்
மண்டமர் கடந்தநின் வென்னாட டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்"

எனச் சொல்லி முடிவில்,

**"நின் அளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்**
**நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு**
**புரையுநர் இல்லாப் புலமை யோய்"**

என்று கூறி வணங்குவர். வேறு சிலர்.

**"யாஅம் இரப்பவை,**
**பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒலிதா ளேயே"**

என்றும், வேறு சிலர்,

**யாமும் எம்சுற்றமும் பரவுதும்**
**ஏம வைகல் பெறுக யாம்எனவே"**

என்றும் வழிபடுகின்றனர். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுக என்பது தமிழர் வழிபாட்டு முறை. இன்றைய தமிழர், தெய்வ வழிபாட்டில் தாம் அறியாத மொழியில் "முறம் போன்ற காதுகளையுடையவனே,' "குடம் போன்ற வயிற்றையுடையவனே,' பெண்ணின்பத்தைப் பெரிதும் விரும்புபவனே,' என்று ஆண் தெய்வங்களையும், "மலை போன்ற கொங்கைகளை யுடையவளே" "கடல் போன்ற நிதம்பத்தை யுடையவளே" "இடையறாத போகத்தை விரும்புபவளே" என்று பெண் தெய்வங்களையும் வழிபாடு என்ற பெயரால் வசைபாடுகின்றனர். இன்றைய வழிபாட்டு அருச்சனைகளில் தெய்வ தூஷணமும் வஞ்சனையும் பெருகியிருக்கிறதேயன்றிப் பூசனையும் வணக்கமும் இல்லை என்றால் அது மிகையாகாது. வடமொழித் தொடர்களைக் கேட்கும் வடமொழி அறிஞர் மனத்தே வெறுப்பும், முகத்தே சுளிப்பும் கொண்டு வருந்துகின்றனர். அரசியல், கல்வி,

வாணிபம் முதலிய எல்லாத் துறைகளும் மக்கள் வழங்குகின்ற மொழியிலேயே இயங்க வேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்திருக்கும் இந்நாளில் தமிழருள் சிலர் மொழிவெறி கொண்டு தாம் சமய வழிபாட்டில் செய்துவரும் பெரும் பிழையைத் திருத்திக்கொள்ளாமல் விடாப்பிடியாக இருப்பது சமய வளர்ச்சிக்கு ஆதரவு தருவதாகத் தோன்றவில்லை. வடமொழியறிஞர்க்கும் வெறுப்பைத் தந்து, நாட்டு மக்களுக்கு இருளை விளைவித்துச் சமய உணர்வொழுக்கங்களில் மக்கள் உள்ளத்தில் புறக்கணிப்பை நல்கும் இப்பிழைபட்ட வழிபாட்டு முறையைச் சமய நிலையங்கள் இனியும் நீடிக்க விடுவது அறமாகாது. மேலும் வடமொழி ஆகமங்களோ தமிழ்ச் சமய இலக்கியங்களோ யாதும் எக்காலத்தும் எவ்விடத்தும் வடமொழியில் தான் வழிபாடு நடைபெற வேண்டுமென்ற விதியை வகுத்ததே கிடையாது. வாழ்க்கைத் துறையில்தான் போலிச் செயல் பெருகிற்றென்றால் வழிபாட்டிலும் போலியுரை வளருமானால் தெய்வங்களின் அருள்தான் கைவருமோ என்று உள்ளம் அஞ்சுகின்றது. தெய்வந்தான் துணைசெய்ய வேண்டும்.

# 7. தமிழர் மருத்துவக்கலை

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்
*அரசாங்க இந்திய மருத்துவ மத்திய சபை உறுப்பினர்*

உலகில் மக்கள் இனம் என்று தோன்றியதோ அன்றே மக்களுடன் பிணி, மூப்பு, சாக்காடுகளும் எதிர்பாரா இன்னல்களும் தோன்றிவிட்டன. அதற்குப் பரிகாரங்களை அனுபவத்தில் கண்ட நம் முன்னோர்கள் அவைகளைப் பரம்பரையாய்க் கையாண்டு வந்தனர். மக்கள் பேசிய ஒலிவடிவமாகிய மொழிக்கு வரிவடிவமாய் எழுத்து ஏற்பட்ட பின்னர் அவர்கள் கண்ட உண்மைகளையும் அறிவு அனுபவங்களையும் அவர்களின் பின் சந்ததியாகிய நமக்கு நூல்களாக்கி வைத்தனர். அந்நூல்களில் மருத்துவக் கலையை முதன்மையானதெனக் கூறலாம்.

மக்கள் நோயின்றி உடல் உரத்துடன் நெடுநாள் நலமாய் வாழ்ந்து வீடுபேற்றை அடைவதற்கான வழிகளைக் கூறுவதே மருத்துவக் கலையாகும்.

மூவாசையில் மூழ்கி முக்குணவயப்பட்ட ஆறறிவுள்ள மக்களுக்கு நோய்கள் மிகுதியாய் வருகின்றன. நோய்கள் உடம்பைப் பற்றியும், உள்ளத்தைப் பற்றியும் வருவதென இருவகைப்படும். வயது, செய்தொழில், வாழும் நிலத்தியல்பு, பருவகாலங்களுக்கேற்ப, உணவு உடை தொழில் முதலியவற்றைச் சரிப்படுத்திக் கொள்ளாததால் வரும் உடற்பிணியையும், அவா மிகுதியால் வரும் கவலை, அச்சம், சினம் முதலியவைகளால் ஏற்படும் உள்ளப்பிணிகளையும் வராமல் தடுப்பதும் வந்த நோய்களைப் போக்குவதும் மருந்தாகும்.

மருந்து பற்றித் திருமூலர்,

**"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்**
**மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்**
**மறுப்பது இனிநோய் வாரா திருக்க**
**மறுப்பது சாவே மருந்தென லாமே"**

என்று குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர்,

**"உற்றவன், தீர்ப்பான், மருந்துஉழைச் செல்வானென்**
**றப்பால்நாற் கூற்றே மருந்து"**

என்பதால் மருந்தென்பது ஒரு தனிப் பொருளன்று என்பது வெளியாகிறது.

பிணியாளி, பிணியைத் தீர்க்க முன்வந்த மருத்துவன், அவன் கையாளும் மருந்து, மருத்துவன் சொன்னபடி நோயாளிக்கு மருந்து உணவு முதலியவை கொடுத்து அருகிலிருந்து துணையுரியும் (நர்சு) துணையாள் இந்த நான்கில், பிணியாளிக்கு நான்கு குணம், மருத்துவனுக்கு நான்கு குணம், அவன் கொடுக்கும் மருந்துக்கு நான்கு குணம், துணையாளுக்கு

நான்கு குணம், ஆகப் பதினாறு குணங்களும் கண்டு மருத்துவம் செய்யப்பட்டால் ஒரு பிணியாளி பிணி நீங்கிப் பிழைக்கும் வாய்ப்பு உண்டாகும்.

**மணி மந்திரம் மருந்து**

தமிழ் மருத்துவக் கலையில் மணி, மந்திரம், மருந்தென மூவகை முறைகளிருக்கின்றன. இக்காலத்தில் முன் இரண்டு முறைகளும் மறைந்து கிடக்கின்றன. அதனால் இக்கால மக்கள் உடல் உரமின்றி நோய்வாய்ப்பட்டு விரைவில் மாளுகின்றார்கள். அப்பர் அடிகள்.

**"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானை**
**பிரிவிலா அடியார்க்கென்றும்**
**வாராத் செல்வம் வருவிப்பானை மந்திரமும்**
**தந்திரமும் மருந்துமாகித்**
**தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னை"**

எனவும், தாயுமானார்,

**"மணிமந்திர மாதியால் வேண்டுசித்திகள் உலக**
**மார்க்கத்தில் வைக்கவிலையோ"**

எனவும், இராமலிங்க வள்ளலார்,

**"மருந்தறியேன், மணியறியேன், மந்திரமொன் றறியேன்**
**மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்'**

எனவும், மருத்துவன் இலக்கணம் என்னும் நூல்,

"குணங்கள் குறிகள் நாடியினால் குறித்து மனத்தின் திடமதனால்பிணங்கியேறும் பிணிபலவும் பினமுன் கண்டுதானறிந்து

**வணங்கு மருந்தால் மந்திரத்தால்"**

எனவும் கூறியுள்ளமை கொண்டு மணி மந்திரம் மருந்து என்னும் மும்முறைகளை அறியலாம்.

மக்கள் நலமாய் வாழ்வதற்கான தமிழ் மருத்துவக் கலைகளிலுள்ள மணி, மந்திர, மருந்தெனும் மூவகை முறைகளில் முன் இரண்டு முறைகளில் மறைந்து கிடக்கும் மணி, மந்திர மெனும் பொருளைப் பற்றி நமக்குத் தெரிந்த வரையில் விளக்கிக் கூற வேண்டியது கடமையாகும்.

## மணி

மணி என்பது காலம். காலத்தை அளிப்பது தினமணியாகிய கதிரவனேயாகும்; கதிரவனாகிய விண்மணி வெளிப்பட்டு நம் கண்மணியிற் கலந்தாலன்றிப் புற இருள் நீங்கிப் பொருள்களை நாம் காணவியலாது. "கதிரவன் ஒளியே யன்றிக் கண்ணுக்கோர் ஒளியுமில்லை." ஞாயிற்றின் ஒளி காலை, மாலை சிறிது, நேரமாவது நமது கண்ணிலும் உடம்பிலும் கலத்தல் வேண்டும். அதனால் நமது கண்ணொளி கெடாமலிருப்பதோடு, தலையிலுள்ள மூளையும் பலப்படுகிறது; நினைவு வன்மையுண்டாகிறது; இளமையில் நரைக்காது; மயிர் உதிராது; தலை வழுக்கை ஏற்படாது.

**"ஆதித்தனுதித்த மூன்றே முக்கால்**
**அறிந்து பிணிக்கு மருந்து செய்விர்**
**ஆதித்தனுதித்த மூன்றே முக்கால்**
**அறிந்து பிணிக்கு மருந்து கொள்விர்**
**ஆதித்தன் சாட்சியாய்ப் பிணிதீரும்**
**அயனம் விருத்தமும் வாராதே"**

என ஆதித்தன் என்னும் ஞாயிற்றைப் பற்றி மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. வேதாந்த சைவ சித்தாந்த சமய தத்துவ நூல்களில் மணி மந்திரம் மருந்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

மணி என்றால் மனத்தை ஒன்றில் நிறுத்தி ஒரே நாமத்தைப் பலகால் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் செபம் செய்கிறவர்கள் கையில் பிடித்து எண்ணும் மணிக் கோவையை (செபமாலை) மணி என்றும், இரசத்தை மணியாகக் கட்டுவது இரசமணி என்றும் பலர் கூறுவர். அவை பொருந்தா, உடம்பில் ஆடையின்றிச் சிறிது நேரம் சூரிய ஒளி உடம்பில் படும்படி காய்வதால் உடம்பிலுள் வியர்வைக்கால் மயிர்க்கால்கள் வழியே கதிரவன் ஒளி ஊடுருவிச் சென்று உடம்பிலுள்ள செந்நீர் தூய்மையடைகிறது. நோயணுகாமல் காப்பாற்றுகிறது, உள்ள நோய் ஒழிகிறது. இம்முறைகளை அனுபவத்தில் கண்ட நம் முன்னோர்கள் காலை மாலை ஆறு, குளம், கிணறு முதலிய நீர் நிலைகளில் மூழ்கிக் குளித்தவுடன் கொஞ்ச நேரமாவது சூரியனைக் கண்ணால் பார்த்து உடம்பிலும் வெய்யில் படும்படி காய்ந்தார்கள். கண்ணும் கருத்தும் கெடாமல் உடல் வன்மை நினைவு வன்மையோடு நெடுநாள் நலமாயிருந்தார்கள்.

## ஞாயிறு வழிபாடு

தமிழர் உடல்நல முறையும், சமயமும் ஒன்று கலந்துவிட்டது. நம் முன்னோர்கள் காலை, மாலை வழிபாடு செய்யாமல் உணவு உண்பதில்லை. ஆண், பெண் இரு பாலாரும் காலையில் கீழ்த்திசையில் ஞாயிறு கண்ணுக்குத் தெரிந்தாலும் கண்ணுக்குத் தெரியாமல் மேகத்தால் மறைக்கப்பட்டிருந்தாலும் ஞாயிற்றின் ஒளிவட்டத்தை அகக் கண்ணால் பார்த்து மண்டியிட்டு

முழங்காலில் நின்று இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக் குனிந்து நிலத்தில் நெற்றி படும்படியாகத் தலையைக் கீழே வைத்தும், பின்னர்த் தலை நிமிர்ந்து முழங்காலில் நின்று கைகளைத் தலைக்குமேல் தூக்கி இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதும், பின்னர்த் தலை குனிந்து நெற்றி நிலத்தில் படும்படி தலை வணங்கியும் இப்படிப் பல தடவை செய்து வழிபடுவார்கள். அப்படி வணங்குங்காலத்தில் தலை குனியும்போது மூச்சை மெல்ல இழுத்து உள்ளே நிறுத்தியும், குனிந்து தலையைக் கீழே வைக்கும்போது உள்ளே நிறுத்திய மூச்சை மெல்ல வெளியே விட்டும் வழிபடுவார்கள். இதனால் அவர்கட்கு உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி இரண்டும் நடைபெறுவதோடு மந்திரத்துக்குரிய மனப் பயிற்சியும் நடைபெறுகிறது. மந்திரத்தைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

மணியாகிய ஞாயிறு வழிபாடு சுமார் எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்வரை நம் முன்னோர்கள் செய்து வந்தார்கள்.

இன்று நாம் மருத்துவக் கலையைச் சேர்ந்த நல்லொழுக்க மாகிய அப்பழக்கங்களை அநாகரிக மூடப்பழக்கமெனப் புறக்கணித்துக் கைவிட்டுவிட்டோம். நம் முன்னோர்கள் பலர் நோயின்றி நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்து சாகுங் காலத்திலும் நோய்வாய்ப்படாமல், "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவிழந்து ஐமேலுந்தி அலமந்து" உயிர் போகாமல் நல்லறிவோடு தூங்குவதுபோல் உடலையும் இம்மண்ணையும் விட்டு விண்ணிற் கலந்தார்கள்.

நமது நாட்டில் நம்முடன் பிறந்து நம்முடன் வாழும் முகம்மதியரெனும் 'இஸ்லாமான சகோதரர்'கள் இப்பழக்கங்களில்

சிலவற்றை நாள்தோறும் காலந்தவறாது செய்கின்றார்கள். அவர்கள் வீட்டைவிட்டு இரயிலில் கப்பலில் பயணம் சென்றாலும், வீதிகளில் நடந்து சென்றாலும், வியாபாரம் செய்து கொண்டிருந்தாலும், வேறெங்கும் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் வழிபாடு செய்கின்றார்கள். நம்மவர்கள் அவர்களைப் பார்த்து, 'நாகரிகம் தெரியாதவர்கள்' என எண்ணுகிறார்கள். இஸ்லாமானவர்கள் நம்மைவிட வலிவானவர்களாகவும் நோய் குறைந்தவர்களாகவும் காணப்படுவதற்கு அவர்கள் கொண்டுள்ள இந் நற்பழக்கமே காரணமாகும்.

## மந்திரம்

மனத்தை உரப்படுத்துவது, அலையு மனத்தை அகத் தடக்குவது, ஒரு நாமத்தையோ, ஓர் உருவத்தையோ இடையறாது நினைப்பது மந்திரம். 'சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை' என்பர் பெரியோர். காலை, நண்பகல், மாலை மூன்று வேளையும் மந்திரம் செபிக்கப்பெறும். தனித்திருந்து கண்ணை மூடிக்கொண்டு கருத்தை ஒன்றில் நிறுத்த உதவுவது மந்திரம். மந்திரத்துக்கும் மூச்சுக்கும் தொடர்புண்டு. மூச்சுப் பயிற்சி மந்திரத்தோடு செய்யப்பெறும்.

## திருமந்திரம்

**நாசிக்கு அதோமுகம் பன்னிரண் டங்குலம்**
**நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்**
**மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்**
**தேகத்திற் கென்றும் சிதைவில்லை காணே**

**வாசிவா வென்று வாசியில் ஊடாடி**
**வாசியை உள்ளே வைத்துநீ பூசித்தால்**
**வாசியும் ஈசனும் மருவி ஒன்றாகும்**
**வாசியைப்போல் சித்தி மற்றேது மில்லையே**
**மனமடங்க வாசி அடங்கும்**
**வாசி அடங்க மனமடங்கும்.**

மந்திர சக்தியே மனோசக்தி, மனோசக்தியே ஜீவசக்தி, ஜீவசக்தியே தேச சக்தி.

## மூவகைக் குற்றம்

திரிதோஷம் என்னும் வாத, பித்த, சிலேத்துமம் என்னும் (கபம்) இம் முப்பொருள்களின் ஏற்றக் குறைவால் வருவதே நோய் என்பது தமிழ் மருத்துவக் கலையின் அடிப்படை. இதைச் சிறிது விளக்குவோம்.

அண்டத்திலுள்ள பஞ்சபூதமெனும் ஐம்பெரும் பொருள்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்பவற்றுள் நமது உடம்பில் உயிராயிருந்து உடம்பை இயக்கிச் செயற்படுத்துவது வளி, தீ, நீர் எனும் முப்பொருள்களேயாகும். ஐம்பெரும் பொருள்களில் தம்நிலையில் மாறுபாடாதன மண்ணும் விண்ணும். நடுவிலுள் முப்பொருள்கள் தம் நிலையில் அடிக்கடி மாறும். இவைகள் அண்டததில் வியாபித்துள்ளதே போய் பிண்டமாகிய நமது உடம்பிலும் வியாபித்துள்ளன.

• வளி, தீ, நீர் இவையே வாத, பித்த, சிலேத்துமமென மருத்துவ நூல்களில் கூறப்படுகின்றன. இம் முப்பொருள்கள் உயிருள்ள பிராணிகளை எல்லாம் செயற்படுத்துவதோடல்லாமல்

உயிர் இல்லாத பொறிகளாகிய இரயில், கப்பல், மோட்டார் கார், ஏரோப்பிளேன் முதலியவைகளையும் இயக்குகின்றன. காற்று, தீ, நீர் மூன்றும் தன்னிலையில் மிகாமல் குறையாமல் இருக்கிறவரையில் மக்கள் உடல்நிலையும் சரியாயிருக்கிறது. மற்றப்பொறிகளும் சரியாய் இயங்குகின்றன. அண்டத்திலும் முப்பொருள்களில் ஏதாவது ஒன்று மிகுந்தாலும் குறைந்தாலும் ஆபத்தாயிருக்கிறது. ஐம்பெரும் பொருள்களில், நிலமும், வானும் மட்டும் தன் நிலையில் மாறுபாடில்லாமலிருப்பதால் அதையே ஐந்துக்கு இரண்டு பழுதில்லை எனப் பெரியோர் கூறுவர். மக்கள் நோயின்றி வாழ்வதற்கும் நோயால் துன்பப்படுவதற்கும் நம் உடம்பில் வளி, தீ, நீர் என்னும் முப்பொருள்கள் மிகுதல் குறைதலே காரணமாகிறது. இதனால் முப்பொருள் குறை நிறைகளுக்குத் "திரிதோஷ"மெனப் பெயரிட்டனர்.

> **"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
> **வளிமுதலா எண்ணிய மூன்று"**

என வள்ளுவரும் கூறுகின்றார். உடம்பில் முப்பொருள்களை மிகுதல் குறைதலின்றி வைத்து நோயணுகாமல் வாழும் வகைகள் பற்றித் தமிழ் மருத்துவ நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ் மருத்துவம் இயற்கையோடு பெரிதும் ஒத்தியங்குவது. ஏற்றபடி அதன் சிறப்புகளை உணர்ந்து போற்றும் திறம்தான் தமிழ் மக்களிடையில் இல்லை.

மருந்து நிற்க, மேற்கூறிய முப்பொருள்களுக்குள் முதற் பொருளும், பெரும்பொருளும், வலிய பொருளுமாவது வளியே யாகும். இவ்வளியில் அடங்கியதே ஏனைய தீயும் நீரும். இந்த வளியாகிய பிராணவாயுவே நமது நாசியின் வழியே உட்புகுந்து வெளிப்போந்து உயிராய் விளங்குகிறது. இந்த உயிரைக்

கவனித்து வளர்க்கும் பயிற்சிக்கே மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) எனப் பெரியோர் கூறுகின்றார்கள்.

**"ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை;**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறிஅது வாமே"**

என்கிறார் திருமூலர்.

முற்காலத்தில் நமது பெரியோர்கள் மூச்சுப் பயிற்சியைக் காலை, நண்பகல், மாலை மூன்று வேளையும் தவறாது செய்து வந்தார்கள். ஆதலால் நோயின்றி உடல் உரத்துடன் நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்தார்கள்.

பிராணாயாமம் எனும் மூச்சுப் பயிற்சி செய்யும் முறையை எனது தந்தையிடத்தில் தெரிந்துகொண்டதையும், நூல்களில் கண்டதையும் விரிவஞ்சி இதில் எழுதாமல் விடுகின்றோம். உயிர் நலத்திலும் உடல் நலத்திலும் அக்கறையுள்ளவர்கள் அதைத் தக்கவர்கள் வழி அறிந்து செய்து நலமடைவார்களாக! தமிழ் மருத்துவக்கலை மேற்கூறிய மணி மந்திரங்களோடு இம் மூச்சுப் பயிற்சி முறைகளையே இயற்கைப் பெருமருந்தாகக் கொண்டு போதிக்கின்றது. ஏனைய மருந்துகள் நான்காம் பகுதியே.

தமிழ் மருத்துவ நூல்களில், உடம்பில் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகள் உள்ளனவென்றும், அவற்றில் பத்து நாடி முதன்மை என்றும், பத்தில் மூன்று நாடி முதன்மை எனவும், நாழிகை ஒன்றுக்கு முந்நூற்றறுபது மூச்செனவும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்செனவும், 5 நாழிகைக்கு–

இரண்டு மணிநேரத்துக்கு—ஒருமுறை வலப்புற மூக்கிலிருந்து இடப்புற மூக்குக்கும் இடப்புற மூக்கிலிருந்து வலப்புற மூக்குக்கும் சரம் மாறுகிறதெனவும் கூறப்பட்டுள்ளன. வலப்புற மூக்கில் நடப்பது இடகலை எனவும், வலத்திலிருந்து இடப்பக்கம் மாறுவதற்கு இடையில் இரண்டு மூக்கிலும் கொஞ்ச நேரம் மூச்சு நடப்பது சுழிமுனை எனவும் இடப்பக்கம் நடக்கும்போது பின் கலை எனவும் வலப்பக்கம் நடப்பது சூரிய கலை வெப்பநாடி எனவும், இடப்பக்கம் நடப்பது சந்திர கலை தட்ப நாடி எனவும் கூறுவர்.

மூச்சு இயங்கும் வகையைக் கொண்டே இன்ன நோய் வரும் என்பதை முன்னரே அறிந்து ஆவன செய்துகொள்ளவும் நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்று தெரிகிறது. விஞ்ஞான வசதி மிக்க இந் நாளில் இன்னும் காணாத பல நுட்பமான உடம்பின் அமைப்புகளை எல்லாம் நம் முன்னோர் மிகப் பழைய நாளிலேயே கண்டிருக்கின்றனர். அவைகளை எல்லாம் புறக்கணிக்காது ஆராய்ந்து போற்ற வேண்டும். நம் புறக்கணிப்பால் எவ்வளவோ அரும் பெருங்கலை நூல்கள் அழிந்துவிட்டன.

இருக்கின்ற தமிழ்க்கலை நூல்களையேனும் திரட்டித்தக்க தமிழ் அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ளத் தமிழ் மக்களும் ஆட்சியும் முனைய வேண்டும்.

### வார சரம்

**“வெள்ளி வெண்திங்கள் விளங்கும் புதன்இடம்**
**ஒள்ளிய மந்தன் இரவி செய்வாய்வலம்**
**வள்ளிய பொன்னே வளரும் பிறைஇடம்**
**தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே”**

என்னும் திருமந்திரப் பாடலால் வெள்ளி, திங்கள், புதன் இக்கிழமைகளில் விடியற்காலம் ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள் இடப் பக்கம் மூக்கில் சரம் (மூச்சு) நடைபெறும் எனவும், சனி, ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வலப் பக்கம் மூக்கில் சுவாசம் நடைபெறுமெனவும் வியாழக்கிழமை மட்டும் சந்திரன் வளர்பிறை காலத்தில் இடப் பக்கத்திலும், தேய்பிறை காலத்தில் வலப் பக்கத்திலும் நடைபெறுமெனவும் அறிகின்றோம். பழைய நாளில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் மருத்துவர்கள் அதன்படி நடப்பதையும் கட்டாயம் கவனித்து வந்தார்கள்.

இப்போது நாமும் நம் மூச்சு இம்முறையில் இயங்குவதைக் காணலாம். மாற்றமிருந்தால் உடலில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அறிந்து, நுட்பமாக உடம்பைப் பரிசோதித்து நோய்வராமல் காத்துக்கொள்ளலாம். தமிழ் மருத்துவக்கலை நோய்க்கு மருந்து தேடுவதோடு நிற்காமல், நோய் வருமுன் அறிந்து காக்கும் முறைகளையும் நன்றாகக் கூறுகிறது. ஐந்து நாழிகைக்கு – இரண்டுமணி நேரத்துக்கு–ஒருமுறை நாசியில் வாசிமாறி மாறி நடைபெறுமென்று மேலே குறிப்பிட்டோம். வலப்புற மூக்குத் துளையில் சரம் நடைபெறுவதைச் 'சூரிய நாடி' எனவும், இடப்பக்கம் நடைபெறுவதைச் 'சந்திர நாடி' எனவும் குறிப்பர். வலப் பக்கம் மூச்சு நடைபெறும்போது இன்னின்ன வேலை செய்வது நலமெனவும், இடப் பக்கம் மூச்சு நடைபெறுங்கால் இன்ன வேலைகள் செய்ய வேண்டுமெனவும் கூறுவர்.

## பழைய தமிழ் மருத்துவர்கள் திறம்

பழைய நாள் மருத்துவர்கள் பகல் இரவு சூரிய சந்திர நட்சத்திரங்களைப் பாராமலும், கடிகாரம் எனும் காலங்

காட்டியைப் பாராமலும், இருக்கும் இடத்திலிருந்து மூக்கு முனையில் நடைபெறும் மூச்சுப் பார்த்தே இரவு பகல் மணி சொல்லுவார்கள்; எனது பாட்டனாரிடத்திலும் தந்தையிடத்திலும் இவ்வரிய செயலை நேரில் பார்த்தேன்; இச்சரப் பயிற்சியால் தன்னிடம் வரும் நோயாளிக்கு நோய் தீரும் தீராதெனவும், பிழைப்பான் பிழைக்கமாட்டானெனவும் கூறினார்கள்; நோயாளியை வந்து பார்க்கும்படி மருத்துவனை அழைக்கவரும் ஆண் பெண்களையும், அவர்கள் வந்து நிற்கும் திசைகளையும், அவர்கள் வாயிலிருந்து வரும் முதற் சொல்லையும், அச்சமயம் மருத்துவனுக்கு மூக்கில் நடக்கும் சரத்தையும் கண்டு நோயாளியின் நிலையைத் தெரிந்து கொள்ளுவார்கள்; முற்காலத்தில் மருத்துவர்களும் பெரு மக்களில் பலரும் வீட்டைவிட்டு வெளியே புறப்படும்போது மூக்கில் விரல் வைத்துச் சரத்தைப் பாராமல் புறப்படமாட்டார்கள்; நீரில் தலை முழுகுமுன்னும் உணவு உட்கொள்ளுமுன்னும் வலப்பக்கம் நாசியில் சுவாசம் (சூரியனில் நடைபெறுகிறதா என்பதைக் கவனிப்பார்கள்; சோதிடமும் பார்ப்பார்கள்; வானத்திலுள்ள நவக்கிரகங்களின் உச்சநிலையைப் பற்றிக் கவனித்துச் சூரியனைக் காலை மாலை கண்ணால் பார்ப்பது போல் சந்திரனையும் முக்கியமான நட்சத்திரங்களையும் இரவில் பார்ப்பார்கள். நோயாளியின் ஜாதகத்தையும் பார்ப்பார்கள்; இவைகளை எல்லாம் பார்த்து மருத்துவம் செய்வதுதான் இயற்கை மருத்துவம். அதில்தான் பயன் மிகுதி. தமிழ் மருத்துவம் அப்படிப்பட்டது கிரகமெனும் ஞாயிறு மறைவு மதிமறைவு நேரத்தில் உண்ணாமல் ஓர் அலுவலும் பண்ணாமல் தனித்திருந்து பேசாமல் தியானம் செய்யும்படி தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. அந்நேரத்து ஒளியில் பலவகைக் கெடுதல்

இருப்பதே அதற்குக் காரணம். உலோகங்களைச் செந்தூர பஸ்மங்களாகச் செய்கிற பழக்கத்தால் செம்பை வெள்ளியாகவோ பொன்னாகவோ செய்யும் இரசவாத வித்தையும் பழைய தமிழ் மருத்துவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் அவர்கள் இக்காலம்போல் பெரும்பாலும் பணத்துக்காக மருத்துவம் செய்யாமல், ஏழை எளியவர்களுக்கு இலவசமாகவே மருத்துவம் செய்வார்கள். மருத்துவர்கள் பிணியாளர்களைப் பார்க்கும்போது வெறுந் தரையிலிருந்து நோயாளரைத் தொட்டுப் பார்ப்பதால் நிலக்கவர்ச்சியால் மருத்துவனுடைய தேக காந்த சக்தி நோயாளிக்கும் நோயாளியின் தேக காந்த சக்தி மருத்துவனுக்கும் பரவுகிறதென்பதை அறிந்து, தற்காப்புக்காக நோயாளியைப் பார்க்கும்போது வேறொன்றிலும் அமராமல் மரப்பலகை (மணை) மீது அமர்ந்துதான் பார்ப்பார்கள். நோயாளியை வெறுங்கையால் தொட்டுப் பார்க்காமல் தனது கைக்கும் நோயாளி உடம்புக்கும் நடுவில் மெல்லிய பட்டுத்துணியைப் பிரித்துப் போட்டுப் பார்ப்பார்கள். மரப் பலகைக்கும் பட்டுத் துணிக்கும் நிலக் கவர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் இருக்கிறதென்பதை நம் முன்னோர்கள் அக்காலத்திலேயே கண்டிருந்தார்கள். இன்றும் வயதானவர் பலருக்கும் கிராமங்களில் வாழ்பவர் சிலருக்கும் இது தெரியும். இன்று மின்சாரத்தில் வேலை செய்கிறவர்களிடம் இதைக் காண்கிறோம்.

இவை நிற்க, ஆங்கில ஆட்சிக்குமுன் தமிழ் நாட்டில் பரம்பரையாய்த் தமிழ் மருத்துவக் கலையைத் தந்தையிடத்திலும் குலகுரு முறைப்படியும் அங்கங்கே பலர் கற்றுக் கையாண்டு வந்தார்கள்.

அக்காலத்தில் தமிழ் மருத்துவர்கள் தேக தத்துவ நூல், நோயைப் பற்றிய நூல், நோயணுகா விதி, இரணமருத்துவம், உணவுப் பொருள் மருத்துவ நூல், விஷங்களை நீக்கும் நஞ்சு நூல், ஞானசர நூல் சோதிட நூல் முதலிய பல நூல்களைக் கற்றறிய வேண்டியதோடு ஆசிரியனோடு 12 ஆண்டு பழகவேண்டும் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்தான் தனியே மருத்துவம் செய்யவேண்டும் என விதியிருந்தது. இப்போது அப்படிச் செய்கிற தமிழ் மருத்துவரும் இல்லை; செய்விக்கிற திட்டங்களும் இல்லை. மருத்துவத் துறையிலும் வெளிநாட்டு மருத்துவ முறைகளுக்கே ஆக்கமும் விளம்பரமும் மிகுந்து விட்டன.

## பிணி அறிதல்

பழைய தமிழ் மருத்துவர்கள் நோயாளரைச் சோதித் தறியும்போது நோய் வந்ததற்குக் காரணத்தை முதலில் காண்பார்கள். பலதரப்பட்ட மக்களுக்கு அவரவர் நிலத்தியல்பு, உணவு, கல்வி, அறிவு செய்தொழில் ஆகியவற்றைக் கவனித்தும்,

**"நாடியால் முன்னோர் சொன்ன நல்லொலி பரிசத்தாலும்**
**நீடிய விழியினாலும் நின்ற நாக்குறிப்பினாலும்**
**வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்**
**கூடிய வியாதிதன்னைச் சுகமுடன் அறிந்துபாரே"**

என்றபடி கைநாடி, குரலொலி, உடற்சூடறியத் தொடுதல், கண், நாக்கு, உடம்பின் நிறம், நீர், மலம் இந்த எட்டுவிதச் சோதனையின்றி மருந்து கொடுக்க மாட்டார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்று திருவள்ளுவரும் இதையே கூறுகின்றார்.

சில நோயாளிகளுக்கும், பல மருந்துண்டு அலுத்தவர்கட்கும் இயற்கை மருத்துவம் செய்வார்கள்; பத்தியம் எனக் கூறி உணவை மாற்றுவார்கள். உள்ளப் பிணியாளர்களை, மன நோயாளர்களை, இருக்கும் இடத்தை விட்டு "ஸ்தல யாத்திரை' போகச் சொல்லுவார்கள்.

## இரண வைத்தியம் - அறுவை மருத்துவம்

இக்காலத்தில் நடைபெறுவதைப்போல் அக்காலத்தில் இரண மருத்துவம் நடைபெற்றிருக்குமா எனச் சிலர் சந்தேகப்படுகின்றார்கள்.

"உடல்தனில் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் மாற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"

எனக் கம்பராமாயணத்தில் கம்பர் கூறுவதாலும்,

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்'

என ஆழ்வார் நாலாயிரப் பாடலில் கூறுவதாலும் சில நோய்களுக்கு உடம்பில் சில இடங்களில் சுட்டும், அறுக்க வேண்டிய இடங்களை அறுத்தும், பழைய நாட்களில் மருத்துவம் செய்துள்ளார்கள் என்று தெரிகின்றது. ஆனால் இக்காலத்தைப்போல் இவ்வளவு அறுவை மருத்துவங்கள் அக்காலத்தில் இல்லை. 'இத்தகைய நோய்களும் அக்காலத்தில்

இல்லை. இவ்வளவு பெரிய மருத்துவ மனைகளும் அக்காலத்தில் இல்லை. எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டினாலும் இப்போது நோயாளிகளுக்கு இடம் போதவில்லை என்கிறார்கள். இதற்கு, நாள்தோறும் மக்களுக்கு நோய் அதிகப்படுவதே காரணமாகும். நோய்க்கு மருந்து தருவதைவிட, நோய் வராமல் தடுப்பதே அறிவுடைமை. நிலத்தியல்புக்குத் தக்க மருத்துவ முறைகளும் மருந்துகளும் சமயச் சார்பு கலந்த சுகாதார முறைகளும் இப்போது அழிந்துவிட்டன. மக்கள் தண்ணீர் குடிப்பதையே மறந்துவிட்டனர். நாவரண்டால் காபி, டீ, சோடா, கலர், கிரஷ்தான் குடிக்கிறார்கள். 'சிகரெட்டு', பீடி, சிற்றுண்டிகள் அதிகப்பட்டுவிட்டன.

மேற்கே கதிரவன் மறையும்போது கதிரவனைப் பார்த்துப் பத்து நிமிஷமாவது மூச்சுப் பயிற்சி செய்து தொழவேண்டிய நேரத்தில், உணவு உட்கொள்ளக் கூடாத நேரத்தில் சிற்றுண்டிக் கடைகளுக்குச் சென்று கண்டதைத் தின்று, காபி குடித்துச் 'சிகரெட்டு' பீடியோடு வேடிக்கை விநோதங்களுக்குச் செல்லுகின்ற இக்கால மக்களுக்கு டி.பி. எனும் க்ஷய இருமலும் புற்று நோயும் வயிற்று நோயும் வராமல் விடுமா? இதைக் கல்லூரி மாணவர்கட்கு ஆசிரியர்கள் எடுத்துக் கூறுவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் நமது தாய் மொழியின் வழியாக நீதி நூல்களையும், நோயணுகா விதிகளையும் சிறிதும் கற்காமல் கை விட்டதே காரணமாகும்.

சங்க இலக்கியங்களில் பதினெண்கீழ்க் கணக்கில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற நீதி நூல்களுக்கும் மருந்துப் பெயர்களை வைத்திருக்கின்றார்கள். திருக்குறள் பொருட்பாலில் மருந்தென்னும் குறிப்புள்ளது. சங்கப் புலவர்கள்

மருத்துவன் தாமோதரனார், மலையனார் முதலியோர் தமிழ் மருத்துவர்களென்றே தெரிகிறது. தமிழரசனுக்கு மருத்துவரா யிருந்த பரஞ்சோதியார் அரசனுக்கு அணுக்கராகவும் படைத் தலைவராகவுமிருந்து வடநாட்டு வாதாபி மன்னன் இரண்டாம் புலிகேசி தமிழரசனுக்குக் கப்பம் கட்டாதிருந்த காலத்தில் படையொடு சென்று அவனைப் பணியச்செய்து வெற்றிகண்டு வந்தார் எனச் சரித்திரமிருக்கிறது. அக்காலத்தில் கல்வி அறிவில் சிறந்த பெரியோர்கள் மருத்துவராயிருந்தார்கள். இக்காலத்தில் கல்வி அறிவில்லாதவர்களும் பரம்பரையாய்க் குருகுல முறைப்படி தமிழ் மருத்துவ நூல்களைக் கற்றுத் தக்க ஆசிரியனிடத்தில் பழகி அனுபவமில்லாதவர்களும் தமிழ் மருத்துவம் செய்கிறபடியால் அலட்சியப்படுத்துகிறார்கள். மேற்கூறிய குறைகள் தீர்ந்து மக்களுக்கு நோய் குறைந்து முற்காலம்போல் நோயின்றித் தேகபலத்தோடு நூறாண்டு நலமாய் வாழ வேண்டுமாயின் செல்வர்களும் அரசினரும் தமிழ் மருத்துவக் கல்லூரி நடத்தவேண்டும். இக்காலத்தில் ஆங்கில மொழிக்கும் ஆங்கில அறுவை மருத்துவத்துக்கும் அதிக சலுகை காட்டப்படுகிறது. தமிழ் நாட்டில் சித்தர்கள் முறையாகிய தமிழ் சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றாவது சரியாய் நடைபெறச் செய்யவேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிக்கு முதல் சலுகை காட்ட வேண்டும். மக்கள் நோய் குறைந்து நலமாய் வாழ வேண்டும்.